க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை

# மதிப்பீட்டு அறிக்கை 2024


## 22 தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2024

# மதிப்பீட்டு அறிக்கை

# 22 – தமிழ்மொழியும் இலக்கியமும்




ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

முழுப் பதிப்புரிமையுடையது.

க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2024

மதிப்பீட்டு அறிக்கை - தமிழ்மொழியும் இலக்கியமும்

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | : | ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | : | டபிள்யூ.எஸ்.டீ. வீரசிங்ஹ<br>பரீட்சை ஆணையாளர்<br>ஆய்வு மற்றும் அபிவிருத்தி |
| உள்ளடக்க உருவாக்கத்திற்கான வழிகாட்டல் | : | சீ.கிருஷ்ணகோபி<br>பிரதிப்பரீட்சை ஆணையாளர் |
| பாட உள்ளடக்க அபிவிருத்திக்குழு | : | யூ.எல். உவைஸ்<br>பிரதி ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம்<br><br>எஸ். சுந்தரலிங்கம்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்<br>கல்வி அமைச்சு<br><br>கே.கணேசன்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்<br>வலயக் கல்வி அலுவலகம், நுவரெலியா<br><br>ஏ.ஐ. ரதி (ஆசிரிய ஆலோசகர்)<br>வலயக் கல்வி அலுவலகம், கண்டி<br><br>எஸ். ஜனார்த்தனன் (ஆசிரிய ஆலோசகர்)<br>வலயக் கல்வி அலுவலகம், நுவரெலியா<br><br>பீ.ரகுநாதன்<br>ஆசிரியர்<br>கண்ணகிபுரம் வித்தியாலயம்<br>மட்டக்களப்பு |
| கணினி பக்க வடிவமைப்பு | | எம்.நிரோஷினி<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |
| முகப்பு அட்டை வடிவமைப்பு | | ஏ.எல்.கே.சதுராணி<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |

# பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் அனைத்து தேசியப் பரீட்சைகளிலும் ஆகக் கூடுதலான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வருடாந்தம் தோற்றுகின்ற க.பொ.த (சாதாரண தர) பரீட்சை தொடர்பான இந்த விரிவான மதிப்பீட்டு அறிக்கைக்காகக் கருத்துரைப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். பரீட்சார்த்திகளின் அடைவுகள் குறித்த விரிவான பகுப்பாய்வொன்றை வழங்குதல் பலங்கள் மற்றும் பலவீனங்களை இனங்காணுதல் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பாடசாலைக்கல்வியை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல் ஆகியன இவ்வறிக்கையைத் தயாரிப்பதன் முதன்மை நோக்கங்களாகும்.

இந்த அறிக்கை க.பொ.த (சாதாரண தர) பரீட்சையின் தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடத்தைப் பகுப்பாய்வு செய்து கொள்வதற்கு கல்வித் தொகுதியின் பல்வேறு தரப்பினருக்கும் உதவும் ஒரு பெறுமதிமிக்க வளமாகும். இதன் மூலம் பரீட்சிக்கப்பட்ட ஒவ்வொரு திறமை மற்றும் தேர்ச்சி தொடர்பாகவும் பரீட்சார்த்திகளின் அடைவுகள் குறித்த விரிவான பகுப்பாய்வொன்று ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இது கற்றல் வியூகங்களுக்கு வழிகாட்டுவதுடன், மாணவர்களுக்கு விசேட உதவி தேவைப்படும் துறைகள் குறித்து கவனம் செலுத்துவதற்கும் வாய்ப்பளிக்கின்றது. இவ்வறிக்கையிலுள்ள தரவுகள் மற்றும் பகுப்பாய்வுகளின் துணையுடன், கலைத்திட்ட மேம்பாட்டாளர்களும் கல்விக் கொள்கை வகுப்பாளர்களும் தமது கலைத்திட்ட திட்டமிடல், வள ஒதுக்கீடு மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள முடிவதுடன் மாணவர்களும் பெற்றோர்களும் பரீட்சையின் கட்டமைப்பு மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து தெளிவான புரிதலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கையின் பயன்பாட்டை உகந்ததாக்குவதற்கு, பயநர்கள் அனைவரும் பரீட்சார்த்திகளின் அடைவுத் தரவுகளை நன்கு பரிசீலித்துப் பார்ப்பது மிகவும் பொருத்தமானதாகும். ஒவ்வொரு பரீட்சை வினா உருப்படியையும் பகுப்பாய்வு செய்வதில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அதற்கு இணையாக உள்ள அவதானிப்புக் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்தும் ஆராயப்பட வேண்டும். இந்தப் புரிதலானது, தரவுகளை விளக்குவதற்கு அவசியமான பின்னணியை உருவாக்குகிறது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை கொள்கை வகுப்பாளர்கள், கல்வியியலாளர்கள் அல்லது பரீட்சார்த்திகள் தத்தமது கற்றல்-கற்பித்தல் அல்லது கொள்கை வகுத்தல் செயல்முறைக்கு ஏற்புடையவாறு நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதாகும். மேலும், இவ்வறிக்கையை எதிர்வரும் ஆண்டுகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான ஒரு தரவுத்தளமாகவும் பயன்படுத்த முடியும்.

எமது கல்வித் திட்டத்தில் சாதகமான மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு இந்தத் தகவல்கள் பயன்படுத்தப்படும் விதத்தைப் பொறுத்தே இவ்வறிக்கையின் உண்மையான பெறுமதி தங்கியுள்ளது என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனவே, க.பொ.த (சாதாரண தர) பரீட்சையின் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் இந்த வெளிப்பாடுகள் குறித்து அர்த்தமுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கும், முன்மொழியப்பட்டுள்ள மேம்பாடுகளைச் செயல்படுத்துவதற்கும் ஊக்கத்துடன் செயற்படுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

இறுதியாக, இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வறிக்கையைப் பயநர்களுக்கு உகந்த வகையில் தயாரிப்பதற்குப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளையின் அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சியையும், இப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு அனைத்து வளவாளர்களும் வழங்கிய அர்ப்பணிப்பையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

ஏ.கே.எஸ்.இந்திகா குமாரி லியனகே

பரீட்சை ஆணையாளர் நாயகம்

ஆகஸ்ட் 2024

## பகுப்பாய்வின் சாராம்சம்

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை – 2024 இற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், பாடப்பணிப்பாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வி ஆராய்ச்சியாளர்கள் ஆகிய அனைவருக்கும் ஒரே அளவில் பயனுள்ளதாக அமையும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கையின் உள்ளடக்கம் நான்கு பிரதான பகுதிகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையின் 'தமிழ்மொழியும் இலக்கியமும்' பாடக் கற்றலின் நோக்கங்கள் மற்றும் பாட அடைவுகள் குறித்த தகவல்கள் இவ்வறிக்கையின் முதலாம் பகுதியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த மதிப்பீட்டு அறிக்கையின் இரண்டாம் பகுதியின் கீழ் பகுதி I இற்கான பகுப்பாய்வும், மூன்றாம் பகுதியின் கீழ் பகுதி II இற்கான பகுப்பாய்வும், நான்காம் பகுதியின் கீழ் பகுதி III இற்கான பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முதலாம் பகுதியின் கீழ் மொழிமூலம் மற்றும் பாலின அடிப்படையில் இப்பாடத்திற்காகத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, மாவட்டங்கள் மற்றும் கல்வி வலயங்களின் அடிப்படையில் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுக்கொண்ட விதம் போன்ற தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியின் கீழ் பகுதி I தொடர்பான வினாக்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் குறித்த பகுப்பாய்வு உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் பகுதி I இன் கட்டமைப்பு, பகுதி I வினாத்தாள், பகுதி I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் போன்ற தகவல்களுடன் தரவுகளின் அடிப்படையிலான பகுதி I இற்கான பகுப்பாய்வும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மூன்று மற்றும் நான்காம் பகுதிகளில் முன்வைக்கப்பட்டுள்ள பகுதி II மற்றும் பகுதி III ஆகியவற்றுடன் தொடர்புடைய வினாக்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் வழங்கல் குறித்த பகுப்பாய்வின் கீழ் பகுதி II மற்றும் பகுதி III இன் கட்டமைப்பு, பகுதி II மற்றும் பகுதி III உடன் தொடர்புடைய ஒவ்வொரு வினாவும் புள்ளி வழங்கும் திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளன. இங்கு ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்தமை குறித்த பகுப்பாய்வும், ஒவ்வொரு வினாவினதும் பகுதிகளினதும் உப பகுதிகளினதும் இலகுதன்மையும் தனித்தனியாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன் வினாவுடன் தொடர்புடைய தேர்ச்சிகள் மற்றும் அந்தத் தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்க வேண்டிய விதம், அதாவது இப்பகுப்பாய்வுகளின் அடிப்படையிலான அபிவிருத்திப் பரிந்துரைகளும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

மரபுசார் சோதனைக்கோட்பாடு (Classical Test Theory) மற்றும் வினா உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item Response Theory) ஆகியவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களும், விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதான பரீட்சகர்கள் மற்றும் உதவிப் பரீட்சகர்கள் மற்றும் கற்றல் - கற்பித்தல் செயல்முறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளும் இந்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

பத்தரமுல்ல, பெலவத்தை

**உள்ளடக்கம்** **பக்க இல.**

**பகுதி I**

**1.** பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

**1.1** பாடக் குறிக்கோள்கள் 1

**1.2** பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

1.2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2 பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் பற்றிய விபரம் 2

1.2.3 பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : மாவட்ட அடிப்படையில் 3

1.2.4 பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலய அடிப்படையில் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 8

**பகுதி II**

**2.** வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

வினாப்பத்திரம் - I

2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 9

2.2 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I 10

2.3 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் 14

2.4 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் 15

2.5 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டி 16

2.6 வினாப்பத்திரம் I இற்கான பகுப்பாய்வு 17

2.7 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இற்கான பாடப்பரப்பு அடிப்படையிலான பகுப்பாய்வு 19

**பகுதி III**

**3.** வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

வினாப்பத்திரம் - II

3.1 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 21

3.2 வினாப்பத்திரம் II இற்கான பகுப்பாய்வு 22

3.3 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் II இற்கான வினாக்கள் தொடர்பான விசேட அவதானிப்புகளும் ஆலோசனைகளும் 25

**உள்ளடக்கம்** **பக்க இல.**


| | | |
|---|---|---|
| **3.3.1** | வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 25 |
| **3.3.2** | வினா இலக்கம் 1 இற்கான பகுப்பாய்வு | 27 |
| **3.3.3** | வினா இலக்கம் 2 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 29 |
| **3.3.4** | வினா இலக்கம் 2 இற்கான பகுப்பாய்வு | 32 |
| **3.3.5** | வினா இலக்கம் 3 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 34 |
| **3.3.6** | வினா இலக்கம் 3 இற்கான பகுப்பாய்வு | 35 |
| **3.3.7** | வினா இலக்கம் 4 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 36 |
| **3.3.8** | வினா இலக்கம் 4 இற்கான பகுப்பாய்வு | 37 |
| **3.3.9** | வினா இலக்கம் 5 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 38 |
| **3.3.10** | வினா இலக்கம் 5 இற்கான பகுப்பாய்வு | 40 |

**பகுதி IV**

**4.** வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

வினாப்பத்திரம் - III

| | | |
|---|---|---|
| **4.1** | தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் III இன் கட்டமைப்பு | 42 |
| **4.2** | வினாப்பத்திரம் III இற்கான பகுப்பாய்வு | 44 |
| **4.3** | தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் III இற்கான வினாக்கள் தொடர்பான விசேட அவதானிப்புகளும் ஆலோசனைகளும் | |
| **4.3.1** | வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 46 |
| **4.3.2** | வினா இலக்கம் 1 இற்கான பகுப்பாய்வு | 49 |
| **4.3.3** | வினா இலக்கம் 2 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 50 |
| **4.3.4** | வினா இலக்கம் 2 இற்கான பகுப்பாய்வு | 54 |
| **4.3.5** | வினா இலக்கம் 3 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 56 |
| **4.3.6** | வினா இலக்கம் 3 இற்கான பகுப்பாய்வு | 58 |
| **4.3.7** | வினா இலக்கம் 4 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 60 |
| **4.3.8** | வினா இலக்கம் 4 இற்கான பகுப்பாய்வு | 62 |
| **4.3.9** | வினா இலக்கம் 5 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 64 |
| **4.3.10** | வினா இலக்கம் 5 இற்கான பகுப்பாய்வு | 65 |
| **4.3.11** | வினா இலக்கம் 6 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 67 |
| **4.3.12** | வினா இலக்கம் 6 இற்கான பகுப்பாய்வு | 68 |
| **4.3.13** | வினா இலக்கம் 7 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள் | 69 |
| **4.3.14** | வினா இலக்கம் 7 இற்கான பகுப்பாய்வு | 70 |

## அட்டவணைகளின் பட்டியல் பக்க இல.

| | | | |
|---|---|---|---|
| **அட்டவணை 1.1** | - | பால் அடிப்படையிலான பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரம்பல் | 2 |
| **அட்டவணை 1.2** | - | பால் மற்றும் தரங்கள் அடிப்படையிலான பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரம்பல் | 2 |
| **அட்டவணை 1.3** | - | மாவட்ட அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரவுகளின் பரம்பல் | 3 |
| **அட்டவணை 1.4** | - | கல்வி வலயம் மற்றும் தரங்களின் அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட தரங்களின் பரம்பல் | 4 |
| **அட்டவணை 1.5** | - | வகுப்பாயிடை அடிப்படையில் பரீட்சார்த்திகள் புள்ளிகள் பெற்றுள்ள விதம் | 8 |
| **அட்டவணை 2.1** | - | புள்ளி வழங்கும் திட்டம் | 14 |
| **அட்டவணை 2.2** | - | ஒவ்வொரு வினாவிற்கும் பரீட்சார்த்திகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள விடைகளின் சதவீதம் | 15 |

**வரைபுகளின் பட்டியல்** **பக்க இல.**


| | | | |
|---|---|---|---|
| **வரைபு 2.1** | - | வினாப்பத்திரம் I இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 16 |
| **வரைபு 2.2** | - | பாடப்பரப்பு அடிப்படையில் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டிகள் | 20 |
| **வரைபு 3.1** | - | வினாப்பத்திரம் II இன் வினாக்களைத் தெரிவுசெய்துள்ள விதம் | 22 |
| **வரைபு 3.2** | - | வகுப்பாயிடைக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு | 23 |
| **வரைபு 3.3** | - | வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 24 |
| **வரைபு 3.4** | - | வினா இல. 1 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 27 |
| **வரைபு 3.5** | - | 1 ஆம் வினாவுக்கான இலகுதன்மை | 27 |
| **வரைபு 3.6** | - | வினா இல. 2 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 32 |
| **வரைபு 3.7** | - | 2 ஆம் வினாவுக்கான இலகுதன்மை | 32 |
| **வரைபு 3.8** | - | வினா இல. 3 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 35 |
| **வரைபு 3.9** | - | 3 ஆம் வினாவுக்கான இலகுதன்மை | 35 |
| **வரைபு 3.10** | - | வினா இல. 4 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 37 |
| **வரைபு 3.11** | - | 4 ஆம் வினாவுக்கான இலகுதன்மை | 37 |
| **வரைபு 3.12** | - | வினா இல. 5 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 40 |
| **வரைபு 3.13** | - | 5 ஆம் வினாவுக்கான இலகுதன்மை | 40 |
| **வரைபு 4.1** | - | வினாப்பத்திரம் II இன் வினாக்களைத் தெரிவுசெய்துள்ள விதம் | 43 |
| **வரைபு 4.2** | - | வகுப்பாயிடைக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு | 44 |
| **வரைபு 4.3** | - | வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள் | 45 |
| **வரைபு 4.4** | - | வினா இல. 1 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 49 |
| **வரைபு 4.5** | - | 1 ஆம் வினாவுக்கான இலகுதன்மை | 49 |
| **வரைபு 4.6** | - | வினா இல. 2 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 54 |
| **வரைபு 4.7** | - | 2 ஆம் வினாவுக்கான இலகுதன்மை | 54 |
| **வரைபு 4.8** | - | வினா இல. 3 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் | 58 |
| **வரைபு 4.9** | - | 3 ஆம் வினாவுக்கான இலகுதன்மை | 58 |

**வரைபு 4.10** - வினா இல. 4 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 62

**வரைபு 4.11** - 4 ஆம் வினாவுக்கான இலகுதன்மை 62

**வரைபு 4.12** - வினா இல. 5 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 65

**வரைபு 4.13** - 5 ஆம் வினாவுக்கான இலகுதன்மை 65

**வரைபு 4.14** - வினா இல. 6 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 68

**வரைபு 4.15** - 6 ஆம் வினாவுக்கான இலகுதன்மை 68

**வரைபு 4.16** - வினா இல. 7 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல் 70

**வரைபு 4.17** - 7 ஆம் வினாவுக்கான இலகுதன்மை 70

## பகுதி - I

## 1.0 பாடக் குறிக்கோள்கள் மற்றும் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- கேட்டல், பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய நான்கு மொழித்திறன்களையும் விருத்தி செய்தல்.
- தெளிவான எழுத்தாக்கங்களை வழங்கத் தேவையான மொழித்திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.
- தமிழ்மொழியைத் தொடர்பாடற் கருவியாகக் காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- இலக்கியங்களினூடாகச் சமூக, கலாசார பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணும் மனப்பாங்கை வெளிப்படுத்துதல்.
- கலைகள், விஞ்ஞானம், தொழினுட்பம் என்பவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வதனூடாக வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.
- மொழியினூடாக மாணவர் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியை ஒரு கருவியாகக் கொள்ளுதல்.
- மொழியின் இனிமையையும் சிறப்பையும் உணர்ந்து ஆக்கங்களைப் படைக்கவும் மொழியைச் சிறப்பாகக் கையாளவும் சுவைக்கவும் முழு ஆற்றல் பெறுதல்.
- தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் பிறரிடம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் உணர்ச்சிகளை வெளியிடவும் மொழியைக் கையாளும் திறனைப் பெற்றிருத்தல்.

**மூலம்** : தமிழ்மொழியும் இலக்கியமும், தமிழ்ப்பாட ஆசிரியர் வழிகாட்டி, 2016 இ.தே.க நிறுவகம்

## 1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றியுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

**அட்டவணை 1.1**

பால் அடிப்படையிலான பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரம்பல்

| | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | | | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | | | | மொத்தப் பரீட்சார்த்திகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| மொத்தம் | 73,459 | 35,234 | 47.96 | 38,225 | 52.03 | 8,468 | 4732 | 55.88 | 3,736 | 44.11 | 81,927 | 39,966 | 48.78 | 41,961 | 51.21 |

**மூலம்** ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

**அட்டவணை 1.2**

பால் மற்றும் தரங்கள் அடிப்படையில் பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரம்பல்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | | | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | | | | மொத்தப் பரீட்சார்த்திகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| A | 12,272 | 3,773 | 10.71 | 8,499 | 22.23 | 222 | 57 | 1.20 | 165 | 4.42 | 12,494 | 3,830 | 9.58 | 8,664 | 20.65 |
| B | 11,279 | 4,159 | 11.80 | 7,120 | 18.63 | 346 | 109 | 2.30 | 237 | 6.34 | 11,625 | 4,268 | 10.68 | 7,357 | 17.53 |
| C | 22,916 | 10,253 | 29.10 | 12,663 | 33.13 | 1,598 | 704 | 14.88 | 894 | 23.93 | 24,514 | 10,957 | 27.42 | 13,557 | 32.31 |
| S | 7,190 | 9,758 | 27.69 | 7,432 | 19.44 | 3,023 | 1,571 | 33.20 | 1,452 | 38.87 | 20,213 | 11,329 | 28.35 | 8,884 | 21.17 |
| W | 9,802 | 7,291 | 20.69 | 2,511 | 6.57 | 3,279 | 2,291 | 48.42 | 988 | 26.45 | 13,081 | 9,582 | 23.98 | 3,499 | 8.34 |
| **Total** | **73,459** | **35,234** | **100.00** | **38,225** | **100.00** | **8,468** | **4,732** | **100.00** | **3,736** | **100.00** | **81,927** | **39,966** | **100.00** | **41,961** | **100.00** |

**மூலம்** : ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு, 2024, இ.ப.தி

## 1.2.3 பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : மாவட்ட அடிப்படையில்

**அட்டவணை 1.3**

மாவட்ட அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரங்களின் பரம்பல்

| மாவட்டம் | தமிழ்மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கொழும்பு | 3,479 | 623 | 17.91 | 553 | 15.90 | 1,045 | 30.04 | 807 | 23.20 | 3,028 | 87.04 | 451 | 12.96 |
| கம்பஹா | 1,354 | 200 | 14.77 | 231 | 17.06 | 383 | 28.29 | 311 | 22.97 | 1,125 | 83.09 | 229 | 16.91 |
| களுத்துறை | 2,261 | 238 | 10.53 | 303 | 13.40 | 631 | 27.91 | 571 | 25.25 | 1,743 | 77.09 | 518 | 22.91 |
| கண்டி | 5,134 | 618 | 12.04 | 748 | 14.57 | 1,652 | 32.18 | 1,356 | 26.41 | 4,374 | 85.20 | 760 | 14.80 |
| மாத்தளை | 1,633 | 268 | 16.41 | 244 | 14.94 | 492 | 30.13 | 386 | 23.64 | 1,390 | 85.12 | 243 | 14.88 |
| நுவரெலியா | 6,443 | 677 | 10.51 | 980 | 15.21 | 2,509 | 38.94 | 1,655 | 25.69 | 5,821 | 90.35 | 622 | 9.65 |
| காலி | 334 | 34 | 10.18 | 46 | 13.77 | 108 | 32.34 | 90 | 26.95 | 278 | 83.23 | 56 | 16.77 |
| மாத்தறை | 541 | 56 | 10.35 | 63 | 11.65 | 173 | 31.98 | 162 | 29.94 | 454 | 83.92 | 87 | 16.08 |
| ஹம்பாந்தோட்டை | 192 | 14 | 7.29 | 22 | 11.46 | 50 | 26.04 | 45 | 23.44 | 131 | 68.23 | 61 | 31.77 |
| யாழ்ப்பாணம் | 8,073 | 1,956 | 24.23 | 1,252 | 15.51 | 2,269 | 28.11 | 1,588 | 19.67 | 7,065 | 87.51 | 1,008 | 12.49 |
| மன்னார் | 1,878 | 257 | 13.68 | 300 | 15.97 | 625 | 33.28 | 503 | 26.78 | 1,685 | 89.72 | 193 | 10.28 |
| வவுனியா | 2,414 | 461 | 19.10 | 385 | 15.95 | 753 | 31.19 | 535 | 22.16 | 2,134 | 88.40 | 280 | 11.60 |
| முல்லைத்தீவு | 1,883 | 362 | 19.22 | 347 | 18.43 | 578 | 30.70 | 394 | 20.92 | 1,681 | 89.27 | 202 | 10.73 |
| கிளிநொச்சி | 2,599 | 594 | 22.85 | 430 | 16.54 | 776 | 29.86 | 512 | 19.70 | 2,312 | 88.96 | 287 | 11.04 |
| மட்டக்களப்பு | 8,528 | 1,762 | 20.66 | 1,370 | 16.06 | 2,566 | 30.09 | 1,903 | 22.31 | 7,601 | 89.13 | 927 | 10.87 |
| அம்பாறை | 7,101 | 1,710 | 24.08 | 1,191 | 16.77 | 2,154 | 30.33 | 1,437 | 20.24 | 6,492 | 91.42 | 609 | 8.58 |
| திருகோணமலை | 5,024 | 681 | 13.55 | 742 | 14.77 | 1,532 | 30.49 | 1,207 | 24.02 | 4,162 | 82.84 | 862 | 17.16 |
| குருநாகல் | 2,498 | 319 | 12.77 | 370 | 14.81 | 743 | 29.74 | 599 | 23.98 | 2,031 | 81.31 | 467 | 18.69 |
| புத்தளம் | 2,870 | 425 | 14.81 | 394 | 13.73 | 845 | 29.44 | 722 | 25.16 | 2,386 | 83.14 | 484 | 16.86 |
| அநுராதபுரம் | 1,448 | 178 | 12.29 | 211 | 14.57 | 417 | 28.80 | 361 | 24.93 | 1,167 | 80.59 | 281 | 19.41 |
| பொலன்னறுவை | 649 | 59 | 9.09 | 91 | 14.02 | 205 | 31.59 | 171 | 26.35 | 526 | 81.05 | 123 | 18.95 |
| பதுளை | 3,245 | 375 | 11.56 | 499 | 15.38 | 1,167 | 35.96 | 818 | 25.21 | 2,859 | 88.10 | 386 | 11.90 |
| மொனராகலை | 302 | 51 | 16.89 | 45 | 14.90 | 104 | 34.44 | 72 | 23.84 | 272 | 90.07 | 30 | 9.93 |
| இரத்தினபுரி | 1,537 | 88 | 5.73 | 169 | 11.00 | 471 | 30.64 | 494 | 32.14 | 1,222 | 79.51 | 315 | 20.49 |
| கேகாலை | 2,039 | 266 | 13.05 | 293 | 14.37 | 668 | 32.76 | 491 | 24.08 | 1,718 | 84.26 | 321 | 15.74 |
| **மொத்தம்** | **73,459** | **12,272** | 16.71 | **11,279** | 15.35 | **22,916** | 31.20 | **17,190** | 23.40 | **63,657** | **86.66** | **9,802** | 13.34 |

**மூலம்** : ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

## 1.2.4 பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலய அடிப்படையில்

**அட்டவணை 1.4**

கல்வி வலய அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரங்களின் பரம்பல்

கல்வி வலய அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரங்களின் பரம்பல்

| கல்வி வலயம் | தமிழ்மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கொழும்பு | 3,130 | 580 | 18.53 | 496 | 15.85 | 932 | 29.78 | 707 | 22.59 | 2,715 | 86.74 | 415 | 13.26 |
| ஹோமாகம | 147 | 15 | 10.20 | 26 | 17.69 | 37 | 25.17 | 48 | 32.65 | 126 | 85.71 | 21 | 14.29 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர | 37 | 2 | 5.41 | 3 | 8.11 | 19 | 51.35 | 9 | 24.32 | 33 | 89.19 | 4 | 10.81 |
| பிலியந்தலை | 165 | 26 | 15.76 | 28 | 16.97 | 57 | 34.55 | 43 | 26.06 | 154 | 93.33 | 11 | 6.67 |
| கம்பஹா | 378 | 59 | 15.61 | 61 | 16.14 | 90 | 23.81 | 94 | 24.87 | 304 | 80.42 | 74 | 19.58 |
| மினுவாங்கொட | 170 | 26 | 15.29 | 34 | 20.00 | 50 | 29.41 | 37 | 21.76 | 147 | 86.47 | 23 | 13.53 |
| நீர்கொழும்பு | 365 | 50 | 13.70 | 55 | 15.07 | 106 | 29.04 | 85 | 23.29 | 296 | 81.10 | 69 | 18.90 |
| களனி | 441 | 65 | 14.74 | 81 | 18.37 | 137 | 31.07 | 95 | 21.54 | 378 | 85.71 | 63 | 14.29 |
| களுத்துறை | 1,577 | 166 | 10.53 | 234 | 14.84 | 439 | 27.84 | 381 | 24.16 | 1,220 | 77.36 | 357 | 22.64 |
| மத்துகம | 214 | 15 | 7.01 | 14 | 6.54 | 59 | 27.57 | 66 | 30.84 | 154 | 71.96 | 60 | 28.04 |
| ஹொரண | 470 | 57 | 12.13 | 55 | 11.70 | 133 | 28.30 | 124 | 26.38 | 369 | 78.51 | 101 | 21.49 |
| கண்டி | 1,086 | 186 | 17.13 | 169 | 15.56 | 349 | 32.14 | 272 | 25.05 | 976 | 89.87 | 110 | 10.13 |
| தெனுவர | 542 | 91 | 16.79 | 93 | 17.16 | 155 | 28.60 | 125 | 23.06 | 464 | 85.61 | 78 | 14.39 |
| கம்பளை | 1,385 | 149 | 10.76 | 203 | 14.66 | 478 | 34.51 | 382 | 27.58 | 1,212 | 87.51 | 173 | 12.49 |
| தெல்தெனிய | 237 | 13 | 5.49 | 35 | 14.77 | 77 | 32.49 | 77 | 32.49 | 202 | 85.23 | 35 | 14.77 |
| வத்தேகம | 922 | 89 | 9.65 | 144 | 15.62 | 326 | 35.36 | 233 | 25.27 | 792 | 85.90 | 130 | 14.10 |
| கட்டுகஸ்தோட்டை | 962 | 90 | 9.36 | 104 | 10.81 | 267 | 27.75 | 267 | 27.75 | 728 | 75.68 | 234 | 24.32 |
| மாத்தளை | 1,285 | 200 | 15.56 | 182 | 14.16 | 392 | 30.51 | 312 | 24.28 | 1,086 | 84.51 | 199 | 15.49 |
| கலேவெல | 299 | 64 | 21.40 | 56 | 18.73 | 80 | 26.76 | 60 | 20.07 | 260 | 86.96 | 39 | 13.04 |
| நாவுல | 49 | 4 | 8.16 | 6 | 12.24 | 20 | 40.82 | 14 | 28.57 | 44 | 89.80 | 5 | 10.20 |
| வில்கமுவ | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| நுவரெலியா | 2,441 | 202 | 8.28 | 337 | 13.81 | 937 | 38.39 | 688 | 28.19 | 2,164 | 88.65 | 277 | 11.35 |
| கொத்மலை | 695 | 60 | 8.63 | 90 | 12.95 | 262 | 37.70 | 193 | 27.77 | 605 | 87.05 | 90 | 12.95 |
| ஹட்டன் | 2,558 | 334 | 13.06 | 413 | 16.15 | 1005 | 39.29 | 617 | 24.12 | 2,369 | 92.61 | 189 | 7.39 |
| வலப்பனை | 594 | 73 | 12.29 | 114 | 19.19 | 248 | 41.75 | 118 | 19.87 | 553 | 93.10 | 41 | 6.90 |
| ஹங்குரன்கெத்த | 155 | 8 | 5.16 | 26 | 16.77 | 57 | 36.77 | 39 | 25.16 | 130 | 83.87 | 25 | 16.13 |
| காலி | 241 | 30 | 12.45 | 36 | 14.94 | 73 | 30.29 | 63 | 26.14 | 202 | 83.82 | 39 | 16.18 |
| எல்பிட்டிய | 43 | 0 | 0 | 5 | 11.63 | 15 | 34.88 | 14 | 32.56 | 34 | 79.07 | 9 | 20.93 |
| அம்பலாங்கொட | 13 | 2 | 15.38 | 3 | 3.08 | 6 | 46.15 | 2 | 15.38 | 13 | 100.00 | 0 | 0.00 |
| உடுகம | 37 | 2 | 5.41 | 2 | 5.41 | 14 | 37.84 | 11 | 29.73 | 29 | 78.38 | 8 | 21.62 |

க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2024

மதிப்பீட்டறிக்கை - தமிழ்மொழியும் இலக்கியமும்

| கல்வி வலயம் | தமிழ்மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| மாத்தறை | 231 | 36 | 5.58 | 30 | 12.99 | 69 | 29.87 | 64 | 27.71 | 199 | 86.15 | 32 | 13.85 |
| அக்குரஸ்ஸ | 158 | 15 | 9.49 | 24 | 15.19 | 51 | 32.28 | 48 | 30.38 | 138 | 87.34 | 20 | 12.66 |
| முலடியன - ஹக்மன | 24 | 2 | 8.33 | 2 | 8.33 | 9 | 37.50 | 8 | 33.33 | 21 | 87.50 | 3 | 12.50 |
| மொறவக்க | 128 | 3 | 2.34 | 7 | 5.47 | 44 | 34.38 | 42 | 32.81 | 96 | 75.00 | 32 | 25.00 |
| தங்காலை | 13 | 2 | 5.38 | 2 | 15.38 | 3 | 23.08 | 1 | 7.69 | 8 | 61.54 | 5 | 38.46 |
| ஹம்பாந்தொட்டை | 165 | 9 | 5.45 | 15 | 9.09 | 42 | 25.45 | 43 | 26.06 | 109 | 66.06 | 56 | 33.94 |
| வலஸ்முல்லை | 14 | 3 | 21.43 | 5 | 35.71 | 5 | 35.71 | 1 | 7.14 | 14 | 100.00 | 0 | 0.00 |
| யாழ்ப்பாணம் | 2,964 | 994 | 33.54 | 496 | 16.73 | 738 | 24.90 | 474 | 15.99 | 2,702 | 91.16 | 262 | 8.84 |
| தீவகம் | 490 | 57 | 11.63 | 68 | 13.88 | 170 | 34.69 | 128 | 26.12 | 423 | 86.33 | 67 | 13.67 |
| தென்மராட்சி | 802 | 182 | 22.69 | 122 | 15.21 | 224 | 27.93 | 154 | 19.20 | 682 | 85.04 | 120 | 14.96 |
| வலிகாமம் | 2,349 | 370 | 15.75 | 336 | 14.30 | 736 | 31.33 | 543 | 23.12 | 1,985 | 84.50 | 364 | 15.50 |
| வடமராட்சி | 1,468 | 353 | 24.05 | 230 | 15.67 | 401 | 27.32 | 289 | 19.69 | 1,273 | 86.72 | 195 | 13.28 |
| கிளிநொச்சி தெற்கு | 2,036 | 429 | 21.07 | 338 | 16.60 | 608 | 29.86 | 425 | 20.87 | 1,800 | 88.41 | 236 | 11.59 |
| கிளிநொச்சி வடக்கு | 563 | 165 | 29.31 | 92 | 16.34 | 168 | 29.84 | 87 | 15.45 | 512 | 90.94 | 51 | 9.06 |
| மன்னார் | 1,462 | 225 | 15.39 | 231 | 15.80 | 487 | 33.31 | 372 | 25.44 | 1,315 | 89.95 | 147 | 10.05 |
| மடு | 416 | 32 | 7.69 | 69 | 16.59 | 138 | 33.17 | 131 | 31.49 | 370 | 88.94 | 46 | 11.06 |
| வவுனியா தெற்கு | 1,794 | 392 | 21.85 | 300 | 16.72 | 545 | 30.38 | 373 | 20.79 | 1,610 | 89.74 | 184 | 10.26 |
| வவுனியா வடக்கு | 620 | 69 | 11.13 | 85 | 13.71 | 208 | 33.55 | 162 | 26.13 | 524 | 84.52 | 96 | 15.48 |
| முல்லைத்தீவு | 1,262 | 257 | 20.36 | 217 | 17.19 | 364 | 28.84 | 278 | 22.03 | 1,116 | 88.43 | 146 | 11.57 |
| துணுக்காய் | 621 | 105 | 16.91 | 130 | 20.93 | 214 | 34.46 | 116 | 18.68 | 565 | 90.98 | 56 | 9.02 |
| மட்டக்களப்பு | 2,110 | 627 | 29.72 | 329 | 15.59 | 611 | 28.96 | 414 | 19.62 | 1,981 | 93.89 | 129 | 6.11 |
| கல்குடா | 1,403 | 185 | 13.19 | 211 | 15.04 | 437 | 31.15 | 383 | 27.30 | 1,216 | 86.67 | 187 | 13.33 |
| பட்டிருப்பு | 1,683 | 286 | 16.99 | 257 | 15.27 | 458 | 27.21 | 397 | 23.59 | 1,398 | 83.07 | 285 | 16.93 |
| மட்டக்களப்பு - மத்தி | 2,427 | 571 | 23.53 | 439 | 18.09 | 779 | 32.10 | 448 | 18.46 | 2,237 | 92.17 | 190 | 7.83 |
| மட்டக்களப்பு - மேற்கு | 905 | 93 | 10.28 | 134 | 14.81 | 281 | 31.05 | 261 | 28.84 | 769 | 84.97 | 136 | 15.03 |
| அம்பாறை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

| கல்வி வலயம் | தமிழ் மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கல்முனை | 2,877 | 734 | 25.51 | 507 | 17.62 | 853 | 29.65 | 570 | 19.81 | 2,664 | 92.60 | 213 | 7.40 |
| சம்மாந்துறை | 1,507 | 304 | 20.17 | 218 | 14.47 | 415 | 27.54 | 353 | 23.42 | 1,290 | 85.60 | 217 | 14.40 |
| மகா ஓயா | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| தெஹியத்தகண்டி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| அக்கரைப்பற்று | 1,876 | 460 | 24.52 | 327 | 17.43 | 596 | 31.77 | 364 | 19.40 | 1,747 | 93.12 | 129 | 6.88 |
| திருக்கோவில் | 841 | 212 | 25.21 | 139 | 16.53 | 290 | 34.48 | 150 | 17.84 | 791 | 94.05 | 50 | 5.95 |
| திருகோணமலை | 1,826 | 304 | 16.65 | 305 | 16.70 | 582 | 31.87 | 372 | 20.37 | 1,563 | 85.60 | 263 | 14.40 |
| மூதூர் | 1,296 | 175 | 13.50 | 193 | 14.89 | 412 | 31.79 | 336 | 25.93 | 1,116 | 86.11 | 180 | 13.89 |
| கந்தளாய் | 169 | 23 | 13.61 | 25 | 14.79 | 47 | 27.81 | 42 | 24.85 | 137 | 81.07 | 32 | 18.93 |
| கிண்ணியா | 1,699 | 177 | 10.42 | 218 | 12.83 | 485 | 28.55 | 446 | 26.25 | 1,326 | 78.05 | 373 | 21.95 |
| திருகோணமலை வடக்கு | 34 | 2 | 5.88 | 1 | 2.94 | 6 | 17.65 | 11 | 32.35 | 20 | 58.82 | 14 | 41.18 |
| குருநாகல் | 528 | 33 | 6.25 | 60 | 11.36 | 152 | 28.79 | 145 | 27.46 | 390 | 73.86 | 138 | 26.14 |
| குளியாப்பிட்டிய | 388 | 51 | 13.14 | 51 | 13.14 | 130 | 33.51 | 93 | 23.97 | 325 | 83.76 | 63 | 16.24 |
| நிகவரெட்டிய | 271 | 44 | 16.24 | 59 | 21.77 | 84 | 31.00 | 56 | 20.66 | 243 | 89.67 | 28 | 10.33 |
| மாகோ | 182 | 18 | 9.89 | 24 | 13.19 | 52 | 28.57 | 46 | 25.27 | 140 | 76.92 | 42 | 23.08 |
| கிரியுள்ள | 700 | 116 | 16.57 | 120 | 17.14 | 207 | 29.57 | 173 | 24.71 | 616 | 88.00 | 84 | 12.00 |
| இப்பாகமுவ | 429 | 57 | 13.29 | 56 | 13.05 | 118 | 27.51 | 86 | 20.05 | 317 | 73.89 | 112 | 26.11 |
| புத்தளம் | 2,537 | 371 | 14.62 | 349 | 13.76 | 751 | 29.60 | 636 | 25.07 | 2,107 | 83.05 | 430 | 16.95 |
| சிலாபம் | 333 | 54 | 16.22 | 45 | 13.51 | 94 | 28.23 | 86 | 25.83 | 279 | 83.78 | 54 | 16.22 |
| அநுராதபுரம் | 330 | 28 | 8.48 | 36 | 10.91 | 78 | 23.64 | 101 | 30.61 | 243 | 73.64 | 87 | 26.36 |
| தம்புத்தேகம | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| கெக்கிராவை | 588 | 80 | 13.61 | 88 | 14.97 | 157 | 26.70 | 130 | 22.11 | 455 | 77.38 | 133 | 22.62 |
| கலென்பிந்துனுவெவ | 245 | 27 | 11.02 | 36 | 14.69 | 76 | 31.02 | 71 | 28.98 | 210 | 85.71 | 35 | 14.29 |
| கெப்பித்திகொள்ளாவ | 285 | 43 | 15.09 | 51 | 17.89 | 106 | 37.19 | 59 | 20.70 | 259 | 90.88 | 26 | 9.12 |
| பொலன்னறுவை | 478 | 50 | 10.46 | 79 | 16.53 | 147 | 30.75 | 117 | 24.48 | 393 | 82.22 | 85 | 17.78 |
| ஹிங்குராக்கொடை | 31 | 0 | 0 | 3 | 9.68 | 10 | 32.26 | 11 | 35.48 | 24 | 77.42 | 7 | 22.58 |
| திம்புலாகல | 140 | 9 | 6.43 | 9 | 6.43 | 48 | 34.29 | 43 | 30.71 | 109 | 77.86 | 31 | 22.14 |
| பதுளை | 869 | 118 | 13.58 | 140 | 16.11 | 299 | 34.41 | 212 | 24.40 | 769 | 88.49 | 100 | 11.51 |
| பண்டாரவளை | 1,062 | 156 | 14.69 | 200 | 18.83 | 404 | 38.04 | 237 | 22.32 | 997 | 93.88 | 65 | 6.12 |
| மகியங்கனை | 25 | 0 | 0 | 0 | 0 | 6 | 24.00 | 8 | 32.00 | 14 | 56.00 | 11 | 44.00 |

| கல்வி வலயம் | தமிழ்மொழியும் இலக்கியமும் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியவர்களது எண்ணிக்கை | A | | B | | C | | S | | A+B+C+S | | W | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| வெலிமடை | 604 | 40 | 6.62 | 77 | 12.75 | 221 | 36.59 | 153 | 25.33 | 491 | 81.29 | 113 | 18.71 |
| பசறை | 596 | 52 | 8.72 | 73 | 12.25 | 204 | 34.23 | 185 | 31.04 | 514 | 86.24 | 82 | 13.76 |
| வியலுவ | 89 | 9 | 10.11 | 9 | 10.11 | 33 | 37.08 | 23 | 25.84 | 74 | 83.15 | 15 | 16.85 |
| மொனராகலை | 149 | 25 | 16.78 | 23 | 15.44 | 51 | 34.23 | 39 | 26.17 | 138 | 92.62 | 11 | 7.38 |
| வெல்லவாய | 11 | 4 | 36.36 | 0 | 0 | 2 | 18.18 | 3 | 27.27 | 9 | 81.82 | 2 | 18.18 |
| பிபிலை | 142 | 22 | 15.49 | 22 | 15.49 | 51 | 35.92 | 30 | 21.13 | 125 | 88.03 | 17 | 11.97 |
| தனமல்வில | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| இரத்தினபுரி | 596 | 24 | 4.03 | 60 | 10.07 | 179 | 30.03 | 210 | 35.23 | 473 | 79.36 | 123 | 20.64 |
| பலாங்கொடை | 420 | 38 | 9.05 | 53 | 12.62 | 133 | 31.67 | 124 | 29.52 | 348 | 82.86 | 72 | 17.14 |
| நிவித்திகல | 245 | 5 | 2.04 | 12 | 4.90 | 64 | 26.12 | 91 | 37.14 | 172 | 70.20 | 73 | 29.80 |
| எம்பிலிபிட்டிய | 276 | 21 | 7.61 | 44 | 15.94 | 95 | 34.42 | 69 | 25.00 | 229 | 82.97 | 47 | 17.03 |
| கேகாலை | 233 | 26 | 11.16 | 37 | 15.88 | 77 | 33.05 | 51 | 21.89 | 191 | 81.97 | 42 | 18.03 |
| மாவனெல்லை | 901 | 131 | 14.54 | 130 | 14.43 | 287 | 31.85 | 204 | 22.64 | 752 | 83.46 | 149 | 16.54 |
| தெஹியோவிட்ட | 905 | 109 | 12.04 | 126 | 13.92 | 304 | 33.59 | 236 | 26.08 | 775 | 85.64 | 130 | 14.36 |
| மொத்தம் | **73,459** | **12,272** | **16.71** | **11,279** | **15.35** | **22,916** | **31.20** | **17,190** | **23.40** | **63,657** | **86.66** | **9,802** | **13.34** |

**மூலம்** ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

**அட்டவணை 1.5**

வகுப்பாயிடை அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட புள்ளிகள்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91-100 | 55 | 0.07 | 81927 | 100.00 |
| 81-90 | 2796 | 3.41 | 81872 | 99.93 |
| 71-80 | 9643 | 11.77 | 79076 | 96.52 |
| 61-70 | 13006 | 15.88 | 69433 | 84.75 |
| 51-60 | 14313 | 17.47 | 56427 | 68.87 |
| 41-50 | 14546 | 17.75 | 42114 | 51.40 |
| 31-40 | 13307 | 16.24 | 27568 | 33.65 |
| 21-30 | 8664 | 10.58 | 14261 | 17.41 |
| 11-20 | 4192 | 5.12 | 5597 | 6.83 |
| 00-10 | 1405 | 1.71 | 1405 | 1.71 |

**மூலம்**: ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி.

பரீட்சார்த்திகளில் 8 பேர் புள்ளிகள் எதனையும் பெறவில்லை.

## பகுதி II

## 2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் - வினாப்பத்திரம் - I

### 2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு

### வினாப்பத்திரம் I

நேரம் : 01 மணித்தியாலம்.

மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

இந்த வினாப்பத்திரத்தில் 40 பல்தேர்வு வினாக்கள் அடங்குகின்றன.

எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.

ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் மொத்தமாக 40 புள்ளிகள் வழங்கப்படும்.

**மூலம்** : க.பொ.த (சா.தரம்) வினாப்பத்திரக் கட்டமைப்பு மற்றும் முன்னோடி வினாக்கள், 2016, இ.ப.தி

## 2.2 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I

- **தடித்த எழுத்தில்** உள்ள சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'பவன குமாரனை மலர்க்கை பணிந்து...' - இங்கு **பவனம்** என்பது
(1) நிலம் (2) நீர் (3) தீ (4) காற்று

**2.** 'அதன் பிறகே புள்ளுத் தொடர்ந்து வருமாப் போல...' - இங்கு **புள்ளு** என்பது
(1) களை (2) விளையாட்டுக் கருவி ஒன்று
(3) பறவை (4) வண்டு

**3.** 'பெண்ணருமை தானறியாப் பேதையர்...' - இங்கு **பேதையர்** என்பதன் **எதிர்க்கருத்து**
(1) மேதையர் (2) ஆண்கள் (3) அறிவீனர் (4) மேலோர்

**4.** 'நற்றேரப் பொய்கை யூரன் கேண்மை' - இங்கு **கேண்மை** என்பதன் **எதிர்க்கருத்து**
(1) வாண்மை (2) தீமை (3) பகைமை (4) நன்மை

**5.** 'உன்னிப்பாக அவவைப் பார்க்கத் தொடங்கினேன்' - இங்கு **உன்னிப்பாக** என்ற சொல்லுக்குப் பதிலாக **இடம்பெற முடியாதது**
(1) கூர்மையாக (2) தெளிவாக (3) கவனமாக (4) நுணுக்கமாக

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** மான் என்னும் விலங்கின் ஆணையும் பெண்ணையும் குறித்துநிற்கும் மரபுச் சொற்கள், முறையே
(1) காளை - பிடி (2) கடா - மறி
(3) கடுவன் - பெட்டை (4) கலை - பிணை

**7.** எதிர்ப்பொருள் தரும் சொற்களாலான இணைமொழி
(1) வீடும் வெளியும் (2) உடலும் உயிரும் (3) உள்ளும் புறமும் (4) கறுப்பும் சிவப்பும்

**8.** Narrator என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) கதாசிரியர் (2) கதைசொல்லி (3) தொகுப்பாளர் (4) அறிவிப்பாளர்

**9.** ஒத்தபொருள் தரும் சொற்களின் தொகுதி
(1) பாம்பு, அரவம், பணி (2) ஆபரணம், ஆடை, அணிகலன்
(3) கடல், சக்கரம், ஆழி (4) தொடக்கம், ஆதி, மூலம்

**10.** 'தசரதன் இரண்டு இலட்சியங்களுக்கிடையே ஊசலாடுகிறான்' - இங்கு **ஊசலாடுதல்** என்னும் மரபுத் தொடரால் உணர்த்தப்படுவது
(1) எதைச் செய்வது என்று முடிவு காண முடியாது தவித்தல்
(2) அங்கும் இங்குமாக அலைக்கழிதல்
(3) இரண்டு விடயங்களில் ஆசை கொள்ளல்
(4) இரண்டு விடயங்களுக்குச் சார்பாக இருத்தல்

**11.** 'சகல இடங்களிலும்' என்னும் பொருள் தரும் அருஞ்சொற்றொடர்
(1) குமரி முதல் இமயம் வரை (2) காட்டிலும் மேட்டிலும்
(3) பட்டி தொட்டி எங்கும் (4) மாடமாளிகை கூடகோபுரம்

**12.** நாட்டார் பாடல்களைக் குறிக்க வழங்கும் வேறு பெயர்
(1) தேசியப் பாடல்கள் (2) நாட்டுப் பண்
(3) கானாப் பாடல் (4) வாய்மொழிப் பாடல்கள்

**13.** கலைநிகழ்ச்சி அல்லது வைபவம் ஒன்றை பரீட்சார்த்தமாக முன்கூட்டியே நிகழ்த்திப் பார்த்தல்
(1) ஒப்பனை (2) ஒத்திகை (3) அரங்கேற்றம் (4) மேடையேற்றம்

**14.** உவமைத்தொடர் **இடம்பெறாத** வாக்கியம்
(1) கல்லுளி மங்கன்போல சப்பளிந்துபோய் இருந்தது.
(2) சந்தி பிரிக்காத பாடலைப்போல தலைசுற்றியது விவகாரம்.
(3) அப்படியே அவனை எடுத்துக் கொஞ்ச வேண்டும்போல இருந்தது.
(4) அம்மி பொளிவதுபோல ஒருவிதமான சத்தம் வரும்.

**15.** 'கதை சொல்லும் பழக்கம் வேரூன்றி, அது ஒரு பாரம்பரியமாகவே ஆகிவிட்டது.' - இங்கு **வேரூன்றுதல்** என்பது குறிக்கும் பொருள்
(1) நிலைபெறுதல் (2) பரவுதல் (3) சேதப்படுத்தல் (4) உறுதிபெறல்

**16.** 'ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல்' என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது
(1) சாட்டுப் போக்குச் சொல்லுதல்
(2) விடயங்களைச் செம்மையாக நிறைவேற்றாமை
(3) ஆட்டத்தை நேர்த்தியாகப் பழகாமை
(4) அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமை

**17.** இரட்டைக்கிளவி இடம்பெற்ற தொடர்
(1) அவள் கலகலவெனச் சிரித்தாள்.
(2) வானம் செக்கச்செவேல் என்று இருந்தது.
(3) அரியபெரிய விடயங்களை அறிந்து கொண்டேன்.
(4) ஓடியோடி உழைத்து முன்னேறினான்.

**18.** ஒருவருடைய சாதனைகளை விவரித்து கல்லிலேனும் செப்பேடுகளிலேனும் பொறிக்கப்படும் புகழ் வார்த்தைகள்
(1) கல்வெட்டு (2) சாசனம் (3) மெய்க்கீர்த்தி (4) சரமகவி

**19.** ஆண்பால் - பெண்பால் குறித்த சொற்சோடிகளுள் பொருத்தமானது
(1) வீரன் - வீராங்கனை (2) மாணவர்கள் - மாணவியர்
(3) பேராசிரியர் - பேராசிரியை (4) தலைவர் - தலைவி

**20.** கருவியாகுபெயர் இடம்பெற்ற வாக்கியம்
(1) கத்தி ஆழமாக வெட்டியது. (2) வீணை செவிக்கு இனியது.
(3) சத்தம் காதைத் துளைத்தது!. (4) குழலிசை மனதைக் குளிர்வித்தது.

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

**21.** 'க'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) வேகம் (2) தங்கம் (3) மேகம் (4) அகம்

**22.** பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர்
(1) நடத்தல் (2) மின்சாரம் (3) முதலாளி (4) படிப்பு

**23.** பின்வருவனவற்றுள் வினையடை
(1) வேகமான (2) கருணை மிகுந்த (3) விரைவாக (4) நிதானமான

**24.** உடைமைப்பொருள் வேற்றுமை இடம்பெற்ற தொடர்
(1) காற்றின் வேகம் (2) ஓவியம் வரைந்தான்
(3) வீடு சென்றான் (4) தெருநாய்

**25.** விகாரப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) வான்குருவி (2) தேனருவி (3) கலைவிழா (4) மனவேதனை

**26.** பின்வருவனவற்றுள் தொழிற்பெயர்
(1) தோட்டம் (2) தேட்டம் (3) வேகம் (4) தாகம்

**27.** 'போனவர்கள் பின் உள்ளே வரவில்லை' - இங்கு **போனவர்கள்** என்ற சொல்
(1) தொழிற்பெயர் (2) வினையாலணையும் பெயர்
(3) தெரிநிலை வினைமுற்று (4) குறிப்பு வினைமுற்று

**28.** அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி
(1) நலம், நீலம், பலம், ஞாலம் (2) குணம், குறி, கோலம், கோகிலம்
(3) துரவு, தோட்டம், வாகனம், வீடு (4) குழல், முழவு, வீணை, யாழ்

● பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) காரணப்பெயர் : பறவை, வளையல், பாக்குவெட்டி
(2) இடுகுறிப்பெயர் : மண், கடல், வானம்
(3) உவமைத் தொகை : மதிமுகம், கிளிமொழி, அறிவுக்கடல்
(4) உருவகத் தொடர் : முகமலர், குணக்குன்று, கண்மலர்

**30.** (1) வியங்கோள் வினை : வருக, ஒழிக, பொலியட்டும்
(2) ஏவல் வினை : வா, ஓடாதே, ஓடிப்போ
(3) எதிர்மறை வினை : வரமாட்டான், போகவேண்டாம், வராது
(4) தன்மை வினை : அழுதேன், துரத்தினேன், படித்தாய்

● புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** சொல்லைத் தெரிவுசெய்க.

**31.** அமைச்சரவை முடிவுகள் ..................... அமைச்சரவைப் பேச்சாளரால் வெளிப்படுத்தப்பட்டன.
(1) வர்த்தமானியில் (2) செய்தி அறிக்கையில்
(3) ஊடகவியலாளர் மாநாட்டில் (4) பொதுக் கூட்டத்தில்

**32.** வெள்ளத்தால் பாரிய பாதிப்பை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு தகுந்த ..................... வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
(1) மானியம் (2) காப்புறுதி (3) நிவாரணம் (4) சன்மானம்

**33.** செய்யுள் நடையில் அமைந்த பழைய இலக்கியங்களை ..................... எழுதிய விளக்கவுரைகள் மூலமே எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.
(1) விமர்சகர்கள் (2) உரையாசிரியர்கள்
(3) பதிப்பாசிரியர்கள் (4) நூலாசிரியர்கள்

**34.** கிரிஸ்ரினா, மாணவர் மன்றத்தின் தலைவராக மல்லிகாவை முன்மொழிய, சலீம் அதனை ....................
(1) பிரேரித்தார் (2) நிராகரித்தார்
(3) அங்கீகரித்தார் (4) வழிமொழிந்தார்

**35.** விழாவிற்கு ..................... வந்திருந்தனர் என்பது பற்றிய சரியான விவரம் கிடைக்கவில்லை.
(1) யார் (2) யாவர் (3) யார்யார் (4) எவர்கள்

**36.** அதிபர், ஆசிரியர் மாணவர்களோடு சிரமதானப்பணியில் தானும் ......................
(1) ஈடுபட்டனர் (2) ஈடுபட்டார்கள் (3) ஈடுபடுவர் (4) ஈடுபட்டார்

● கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு **37** தொடக்கம் **39** வரையான வினாக்களுக்கு விடை தருக.

சிந்தனையில் தெளிந்த கரும் சீமேந்தும்
    கற்பனையாம் மணலும் சேர்த்து
உந்தி எழும் உணர்ச்சி எனும் நீர் பெய்து
    குழைத்தெடுத்த உறுதிச் சாந்தில்
செந்தமிழின் யாப்பு உணர்ந்து செஞ்சொற்கள்
    தேர்ந்து கவிக்கொத்தன் செய்யும்
விந்தை மிகும் கலைக்கோட்டம் இலக்கியமாய்
    உலகத்தே விகசிக்கும்மே.

**37.** இக் கவிதை எதைப் பற்றி எடுத்துரைக்கிறது?
(1) கொத்தனின் ஆற்றல் பற்றி (2) இலக்கியம் பற்றி
(3) கலைக்கோட்டம் பற்றி (4) கட்டடம் அமைத்தல் பற்றி

**38.** அது எவ்வாறு உருவகிக்கப்படுகிறது?

(1) கொத்தனாக (2) கலைக்கோட்டமாக

(3) கருஞ்சீமேந்தாக (4) தெளிந்த சிந்தனையாக

**39.** அதைப் படைப்பவன் எவ்வாறு உருவகிக்கப்படுகிறான்?

(1) விந்தை மிகுந்தவனாக (2) கவிஞனாக

(3) கொத்தனாக (4) சிந்தனையாளனாக

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - அது போல, பழமையான இலக்கண நூலும் உண்டு.

ஆ - அதிற் கூறப்பட்டுள்ள விதிகளுட் பல, இன்றைய தமிழ் வழக்கோடும் பொருந்துகின்றன.

இ - அம்மொழியில் மிகப் பழமையான இலக்கியங்கள் உண்டு.

ஈ - அவ்வாறான பழைய இலக்கண நூலாக இன்று கிடைப்பது தொல்காப்பியமே.

உ - தமிழ், உலகில் உள்ள பழமையான மொழிகளுள் ஒன்று.

(1) ஈ, அ, உ, இ, ஆ (2) ஈ, ஆ, இ, உ, அ

(3) உ, அ, ஈ, இ, ஆ (4) உ, இ, அ, ஈ, ஆ

## 2.3 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம்

**அட்டவணை 2.1**

புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 1 | **4** | 21 | **2** |
| 2 | **3** | 22 | **3/4** |
| 3 | **1** | 23 | **3** |
| 4 | **3** | 24 | **1** |
| 5 | **2** | 25 | **4** |
| 6 | **4** | 26 | **2** |
| 7 | **3** | 27 | **2** |
| 8 | **2** | 28 | **3** |
| 9 | **1/3** | 29 | **3** |
| 10 | **1** | 30 | **4** |
| 11 | **3** | 31 | **3** |
| 12 | **4** | 32 | **3** |
| 13 | **2** | 33 | **2** |
| 14 | **3** | 34 | **4** |
| 15 | **1** | 35 | **3** |
| 16 | **1** | 36 | **4** |
| 17 | **1** | 37 | **2** |
| 18 | **3** | 38 | **2** |
| 19 | **1** | 39 | **3** |
| 20 | **2** | 40 | **4** |

ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

**மூலம்**: ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு, 2024, இ.ப.தி.

## 2.4 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம்

## 2.2 அட்டவணை

ஒவ்வொரு வினாவிற்கும் பரீட்சார்த்திகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ள விடைகளின் சதவீதம்


| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவினையும் தெரிவுசெய்தோர் சதவீதம் (%) | | | | * |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | |
| 1 | **4** | 20.89 | 12.87 | 8.97 | 57.05 | 0.22 |
| 2 | **3** | 16.73 | 9.46 | 65.77 | 7.80 | 0.24 |
| 3 | **1** | 71.30 | 5.29 | 21.28 | 2.08 | 0.06 |
| 4 | **3** | 5.33 | 7.03 | 77.23 | 10.31 | 0.10 |
| 5 | **2** | 15.85 | 55.09 | 17.42 | 11.56 | 0.08 |
| 6 | **4** | 4.29 | 11.07 | 5.76 | 78.68 | 0.20 |
| 7 | **3** | 13.30 | 14.17 | 59.68 | 12.70 | 0.16 |
| 8 | **2** | 17.18 | 56.31 | 18.63 | 7.35 | 0.53 |
| 9 | **1,3** | 54.37 | 17.95 | 15.73 | 11.78 | 0.18 |
| 10 | **1** | 79.68 | 9.01 | 5.21 | 6.00 | 0.10 |
| 11 | **3** | 10.23 | 21.94 | 62.26 | 5.37 | 0.20 |
| 12 | **4** | 2.43 | 11.87 | 4.86 | 80.76 | 0.08 |
| 13 | **2** | 5.23 | 77.14 | 11.62 | 5.90 | 0.12 |
| 14 | **3** | 6.27 | 8.15 | 78.51 | 6.92 | 0.16 |
| 15 | **1** | 61.42 | 13.62 | 3.82 | 21.00 | 0.14 |
| 16 | **1** | 68.81 | 11.54 | 8.82 | 10.72 | 0.12 |
| 17 | **1** | 86.09 | 5.13 | 4.98 | 3.66 | 0.14 |
| 18 | **3** | 31.01 | 24.88 | 39.15 | 4.68 | 0.27 |
| 19 | **1** | 72.41 | 5.23 | 8.72 | 13.58 | 0.06 |
| 20 | **2** | 62.09 | 22.57 | 6.76 | 8.33 | 0.25 |
| 21 | **2** | 5.86 | 74.08 | 7.68 | 12.28 | 0.10 |
| 22 | **3,4** | 9.52 | 17.10 | 63.26 | 9.93 | 0.18 |
| 23 | **3** | 11.58 | 23.33 | 61.03 | 3.96 | 0.10 |
| 24 | **1** | 39.79 | 19.73 | 23.00 | 17.22 | 0.25 |
| 25 | **4** | 9.93 | 35.91 | 13.48 | 40.52 | 0.16 |
| 26 | **2** | 23.53 | 32.95 | 30.53 | 12.72 | 0.27 |
| 27 | **2** | 12.66 | 48.30 | 18.18 | 20.61 | 0.25 |
| 28 | **3** | 13.32 | 39.73 | 38.07 | 8.60 | 0.27 |
| 29 | **3** | 20.94 | 15.69 | 49.26 | 13.77 | 0.33 |
| 30 | **4** | 9.19 | 8.21 | 8.97 | 73.41 | 0.22 |
| 31 | **3** | 21.12 | 14.97 | 27.29 | 36.42 | 0.20 |
| 32 | **3** | 12.70 | 6.43 | 72.83 | 7.90 | 0.16 |
| 33 | **2** | 10.74 | 39.67 | 11.34 | 38.01 | 0.24 |
| 34 | **4** | 7.76 | 20.55 | 14.38 | 57.01 | 0.29 |
| 35 | **3** | 8.70 | 9.05 | 74.37 | 7.66 | 0.22 |
| 36 | **4** | 33.07 | 16.01 | 7.03 | 43.75 | 0.14 |
| 37 | **2** | 23.16 | 48.16 | 13.62 | 14.89 | 0.18 |
| 38 | **2** | 6.74 | 61.91 | 15.69 | 15.50 | 0.16 |
| 39 | **3** | 20.63 | 21.22 | 48.22 | 9.76 | 0.18 |
| 40 | **4** | 2.74 | 2.63 | 11.48 | 83.07 | 0.08 |

**மூலம் :** ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி.

* - விடையளிக்காத மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளுக்கு விடையளித்த பரீட்சார்த்திகளின் சதவீதம்
சரியான விடையைத் தெரிவுசெய்துள்ள பரீட்சார்த்திகளின் சதவீதம் நிழற்றப்பட்டுள்ளது.

## 2.5 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்

**வரைபு 2.1**
வினாப்பத்திரம் I இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/05/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

## 2.6 வினாப்பத்திரம் I இற்கான பகுப்பாய்வு

2024ஆம் ஆண்டிற்கான தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இல், 17 ஆம் வினாவின் இலகுதன்மை 86.09% ஆகவும் 40 ஆம் வினாவின் இலகுதன்மை 83.07% ஆகவும் நல்ல நிலையில் அமையப்பெற்றுள்ளன. அவ்வாறே, 20 ஆம் வினாவின் இலகுதன்மை 22.57% ஆகவும் 31 ஆம் வினாவின் இலகுதன்மை 27.29% ஆகவும் குறைவான நிலையில் காணப்படுகின்றன. ஏனைய வினாக்கள் ஓரளவு இலகுதன்மை உடையனவாகக் காணப்படுகின்றன.

20வது வினாவானது, பரீட்சார்த்திகளின் இலக்கண அறிவை பரீட்சிக்கும் நோக்கில் வினவப்பட்டுள்ளது. ‘‘ஆகுபெயர்’’ தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா வினவப்பட்டுள்ளது. இதில், ‘‘கருவியாகுபெயர்’’ இடம்பெற்ற வாக்கியம் எது? என வினவப்பட்டுள்ளது. இந்த வினாவிற்கான சரியான விடை இரண்டாவது தெரிவாகும். ‘‘வீணை செவிக்கு இனியது’’ என்ற சரியான விடையை 22.57% ஆன பரீட்சார்த்திகள் தெரிவுசெய்துள்ளனர். 62.09% ஆன பரீட்சார்த்திகள் முதலாவது தெரிவைச் சரியான விடையாக நினைத்துத் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவின் விடைகளுள் முதலாவது தெரிவு, ‘‘கத்தி ஆழமாக வெட்டியது’’ என்பதாகும். கருவியாகுபெயர் யாது? என்று வினவப்பட்டிருப்பதால் கத்தியை ஒரு கருவியாகக் கருதி முதலாவது விடையைப் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்திருக்கலாம்.

முதலாவது வினாப்பத்திரத்தில், 31வது வினா நாட்டில் பொதுவான விடயங்களுக்குப் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்கும் நோக்கில் வினவப்பட்டுள்ளது. ‘அமைச்சரவை முடிவுகள் ‘----------’ அமைச்சரவைப் பேச்சாளரால் வெளிப்படுத்தப்பட்டன’ இந்த வினாவில், இடைவெளிக்குப் பொருத்தமான சரியான விடையை நான்கு தெரிவுகளுள் இருந்து ஒன்றைத் தெரிவுசெய்தல் வேண்டும். இந்த வினாவிற்கான சரியான விடை மூன்றாவது தெரிவான ‘ஊடகவியலாளர் மாநாட்டில்’ என்பதாகும். இதற்கு, 27.29% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். 36.42% ஆன பரீட்சார்த்திகள் நான்காவது தெரிவான ‘பொதுக்கூட்டம்’ என்ற விடையினைத் தெரிவுசெய்துள்ளனர். அத்துடன், 21.12% ஆன பரீட்சார்த்திகள் முதலாவது தெரிவான ‘வர்த்தமானியில்’ என்ற விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இதன்மூலம், நாட்டின் பொதுவான விடயங்களுக்குப் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் பற்றிய அறிவு பரீட்சார்த்திகளிடம் போதுமான அளவில் இல்லாமை வெளிப்படுகின்றது. எனவே, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது பாடத்திட்டத்திற்கு மேலதிகமாக நாட்டில் பயன்படுத்தப்படும் நடைமுறை சார்ந்த கலைச்சொற்களும் கற்பிக்கப்படல் வேண்டும்.

வினாப்பத்திரம் I இல், 26 ஆவது வினாவானது, பெயர்ச்சொல் பற்றிய மாணவர்களது இலக்கண அறிவைப் பரீட்சிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ள வினாவாகும். இவ்வினாவில் பின்வருவனவற்றுள் 'தொழிற்பெயர்' யாது? என வினவப்பட்டுள்ளது. இவ் வினாவிற்கான சரியான விடை, இரண்டாவது தெரிவான "தேட்டம்" என்பதாகும். இவ்வினாவிற்கு 32.95% ஆன பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்துள்ளனர். 30.53% ஆன பரீட்சார்த்திகள் மூன்றாவது தெரிவினை சரியான விடை என நினைத்து விடை அளித்துள்ளனர். மேலும் 23.53% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையென முதலாவதைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவின் முதலாவது தெரிவு "தோட்டம்" என்பதாகும். பெயர்ச் சொற்களின் வகைகள் தொடர்பாகவும், குறிப்பாக அவற்றுள் தொழிற்பெயர் தொடர்பாகப் பரீட்சார்த்திகளிடையே போதிய தெளிவின்மை காணப்படுவதை இது எடுத்துக்காட்டுகின்றது. ஆகவே, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது மாணவர்கள் இலக்கணப் பகுதிகளை இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடியவாறு, பொருத்தமான கற்றல் - கற்பித்தல் உத்திகளைக் கையாள்வதன் மூலம் மாணவர்களது இலக்கண அறிவை மேம்படுத்த முடியும்.

வினாப்பத்திரம் I இல், 18 ஆவது வினா, மாணவர்களின் மொழிவளத்துடன் தொடர்புடைய 'தொடர்மொழிக்கு ஒரு மொழி' பற்றிய அறிவைப் பரீட்சிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட வினாவாகும். ஒருவருடைய சாதனைகளை விவரித்து 'கல்லிலேனும் செப்பேடுகளிலேனும் பொறிக்கப்படும் புகழ் வார்த்தைகள் எவ்வாறு அழைக்கப்படும்?' என்ற வகையில் இப்பல்தேர்வு வினா தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாவிற்கான சரியான விடை, மூன்றாவது தெரிவான 'மெய்க்கீர்த்தி' என்பதாகும். இவ்வினாவிற்கு 39.15% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்துள்ளனர். 31.01% ஆன பரீட்சார்த்திகள் இவ்வினாவின் விடைகளுள் முதலாவது தெரிவை சரியான விடையாகத் தெரிவு செய்துள்ளனர். முதலாவது தெரிவு 'கல்வெட்டு' என்பதாகும். மேலும் 24.88% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையென இரண்டாவது தெரிவான 'சாசனம்' என்பதைத் தெரிவுசெய்துள்ளனர். பரீட்சார்த்திகளிடையே 'தொடர்மொழிக்கு ஒரு மொழி' தொடர்பான போதிய விளக்கமின்மை காரணமாக 60.85% ஆன பரீட்சார்த்திகள் தவறான விடையைத் தெரிவு செய்துள்ளனர்.

தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடத்தின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது, தொடர்மொழிக்கு ஒரு மொழி என்ற இப்பகுதியின் கருத்தை மாணவர்கள் பொருள் விளக்கத்துடன் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் கற்பிப்பது சிறந்தது. அத்துடன் தொடர்மொழிக்கு ஒரு மொழி என்ற பகுதியை மாணவர்கள் மனனம் செய்வதற்குப் பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

வினாப்பத்திரம் I இல், 17 ஆவது வினா, பரீட்சார்த்திகளின் மொழிவளத்துடன் தொடர்புடைய 'இரட்டைக்கிளவி' சம்பந்தமான அறிவைப் பரீட்சிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட வினாவாகும். இரட்டைக்கிளவி இடம்பெற்ற தொடர் யாது? என்ற வகையில் இந்த வினா வினவப்பட்டிருந்தது. இந்த வினாவிற்குரிய சரியான விடை முதலாவது தெரிவான 'அவள் கல கல எனச் சிரித்தாள்' என்பதாகும். இவ்வினாவிற்கு 86.09% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையினைத் தெரிவு செய்துள்ளனர். 'இரட்டைக்கிளவி' என்ற மொழிவளப் பகுதியில் 'கலகல' என்ற இரட்டைக்கிளவியானது பெரும்பாலான மாணவர்களுக்கு நன்கு பரிச்சயமானதால், அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இதனால் பரீட்சார்த்திகளுக்கு இவ்வினா இலகுதன்மை கூடியதாக அமைந்துள்ளது.

40 ஆவது வினா வாக்கியங்களை ஒழுங்குபடுத்திப் பந்தியாக்கம் செய்யும் திறனைக் கணிப்பிடும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் வினாவிற்கான சரியான விடை நான்காவது தெரிவாகும். இவ் வினாவிற்கு 83.07% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையினைத் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினா இலகுவான முறையில் வாக்கியங்களை விளங்கிப் பந்தியாக்கம் செய்வதற்குரியதாகக் காணப்பட்டது.


12 ஆவது வினா, பரீட்சார்த்திகளிடம் 'நாட்டார் பாடல்கள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றன?' என்ற அறிவை மதிப்பிடும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய சரியான விடை, நான்காவது தெரிவான 'வாய்மொழிப் பாடல்கள்' என்பதாகும். இவ்வினாவிற்கு 80.76% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையினைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினா இலகுதன்மை கூடியதாதலால் அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளிக்கக்கூடியதாக இருந்தது.

## 2.7 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் I இற்கான பாடப்பரப்பு அடிப்படையிலான பகுப்பாய்வு

| வினா இலக்கம் | தொனிப்பொருள் | இலகுதன்மை கூடிய வினாவும் அதன் இலகுதன்மையும் | இலகுதன்மை குறைந்த வினாவும் அதன் இலகுதன்மையும் |
|---|---|---|---|
| 1 - 19 | மொழிவளம் | 17 - 86% | 18 - 39% |
| 20 - 30 | இலக்கணத்திறன் | 21 - 74% | 20 - 23% |
| 31 - 36 | மொழியமைப்பு | 35 - 74% | 31 - 27% |
| 37 - 39 | கிரகித்தல் | 38 - 62% | 37, 39 - 48% |
| 40 | பந்தியாக்கம் | 40 - 83% | - |

**வரைபு** 2.2

பாடப்பரப்பு அடிப்படையில் வினாப்பத்திரம் I இன் வினாக்களின் இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/05/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

# பகுதி III

## 3. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் - வினாப்பத்திரம் - II

### 3.1 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

**வினாப்பத்திரம் II**

வினாத்தாள் II - 02 மணித்தியாலங்கள்

5 வினாக்களைக் கொண்டது.

மொத்தப் புள்ளிகள் 80 ஆகும்.

எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

வினா 1 : 10 குறுவிடை வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

வினா 2 : கட்டுரை எழுதுதல் : 25 புள்ளிகள் ஆகும். (வழிகாட்டற் குறிப்புகளுடனான நான்கு கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

வினா 3 : சுருக்கம் எழுதுதல் : 10 புள்ளிகள்

வினா 4 : கிரகித்தல் : 10 புள்ளிகள்


வினா 5 : நடைமுறைத் தேவைகளுக்கான எழுத்தாக்கங்கள் : 15 புள்ளிகள்

**(மூலம்** : க.பொ.த (சா.தரம்) வினாப்பத்திரக் கட்டமைப்பு மற்றும் முன்னோடி வினாக்கள், 2016, இ.ப.தி)

## 3.2 வினாப்பத்திரம் II இற்கான பகுப்பாய்வு

### வரைபு 3.1


வினாப்பத்திரம் II இன் வினாக்களைத் தெரிவுசெய்துள்ள விதம்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

**வரைபு 3.2**

வகுப்பாயிடைக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு





**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினாப்பத்திரம் II இல், 1 - 5 வரையிலான வினாக்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளுள் 51 - 75% ஆன வகுப்பாயிடையினுள் பெரும்பாலான பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். வினா இலக்கம் 2, 3, 4 மற்றும் 5 ஆகிய வினாக்களுக்கு 0% – 25% இற்குள் குறைந்த அளவான பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் 26% இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு** 3.3

வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

## 3.3 வினாப்பத்திரம் II இற்கான வினாக்கள் தொடர்பான விசேட அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

### 3.3.1 வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) ‘தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன்நுகரா மண்டுகம்’

- இந்த வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.

எழுவாய் - மண்டுகம்

பயனிலை - நுகரா

(ii) பின்வரும் தொடரைப் பதம் பிரித்து எழுதுக.

‘வீழுமோரிடையூறு’

வீழும் + ஓர்+ இடையூறு

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்துவழக்கில் தருக.

‘புத்தகத்தை எடுத்துட்டு வூட்ட வா மனே’

புத்தகத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு / வீட்டிற்கு வா மகனே

(iv) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.

அவன் அறிவிலே மேம்பட்டவன் ஒழுக்கத்திலும் மேம்பட்டவன்

அவன் அறிவிலே மேம்பட்டவன்**;** ஒழுக்கத்திலும் மேம்பட்டவன்.

(v) - நேற்றுப் பெரியதொரு விபத்து ஏற்பட்டது

- உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை

மேற்படி இரண்டு வாக்கியங்களையும் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைக் குறிப்பிடுக.

எனினும் / ஆயினும் / என்றாலும்... இவை போன்றவை

(vi) ‘வரும்’ என்ற சொல் வினைமுற்றாகவும் பெயரெச்சமாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

நாளையும் மழை வரும்.

இன்றைக்கு வரும் புகையிரதத்தில் ஆசனம் கிடையாது.

(vii) பின்வரும் சொற்களிற் காணப்படும் எழுத்துப்பிழைகளை இனங்கண்டு அவற்றைத் திருத்தி சரியான முறையில் எழுதுக.

அந்நியச்செலவாணி, செலவீனம்

அந்நியச்செலாவணி

செலவினம்

(viii) ‘நாடு’ என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

இலங்கை அழகான நாடாகும்.

சிலர் உணவகங்களையே நாடுகின்றனர்.

(ix) - மெய், வாய், கண், மூக்கு, செவி
- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
என்பவற்றைக் குறிக்கும் தொகைச் சொற்களைத் தருக.

- ஐம்பொறி
- ஐம்புலன்

(x) பின்வரும் வாக்கியத்தை வழுவற்ற வகையில் திருத்தி எழுதுக.
- அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


- அனைவருக்கும் எனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.
- அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- முதற்கண் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(02 x 10 = 20 புள்ளிகள்)**

### 3.3.2 வினா இலக்கம் 1 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.4**

வினா இல. 1 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு

இது ஒரு கட்டாய வினாவாகும். இதன் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இதில்,

00 – 05 வரையான புள்ளிப் பரம்பலில் 23% ஆனோரும்

06 – 10 வரையான புள்ளிப் பரம்பலில் 35% ஆனோரும்


11 – 15 வரையான புள்ளிப் பரம்பலில் 31% ஆனோரும்

14 – 20 வரையான புள்ளிப் பரம்பலில் 11% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 00 – 10 வரையிலான புள்ளிகளை 58% ஆனோர் பெற்றுள்ளனர்.

**வரைபு 3.5**

1 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினாப்பத்திரம் II இல், வினா இலக்கம் 1 ஆனது, 10 குறுவினாக்களைக் கொண்டது. அவற்றுள் உப பிரிவு (V), 70% இலகுதன்மை கொண்டதாகவும் உப பிரிவுகள் (i), (ii), (iii), (viii) ஆகியவை 50% இலும் கூடிய இலகுதன்மையுடையனவாகவும் காணப்படுகின்றன. உப பிரிவு (X), 12% இலகுதன்மையைக் காட்டுவதால் அவ்வினா பரீட்சார்த்திகளுக்கு கடினத்தன்மையுடைய வினாவாக அமைந்துள்ளமை தெளிவாகின்றது.

வினா இலக்கம் 1 இன் உப பிரிவு (v) ஆனது இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைப்பது தொடர்பானதாகும். இது மாணவர்களுக்குப் பரிச்சயமானதாக இருந்துள்ளது. எனினும் உப பிரிவு (x) வாக்கியங்களின் வழுவை நீக்கி திருத்தி எழுதுவது தொடர்பானது. இதில் மாணவர்கள் இடர்பட்டுள்ளனர். எனவே வாக்கியங்களின் வழு தொடர்பில் போதிய பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

### 3.3.3 வினா இலக்கம் 2 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i) நமது நாட்டில் சுகாதாரத்துறை குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி கண்டுள்ளது. அனைத்து விதமான நோய்களுக்கும் அரச வைத்தியசாலைகளில் இலவச சிகிச்சை வழங்கப்படுவது ஒரு வரப்பிரசாதமாகும். எமது நாட்டில் நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்கள் பலர் உள்ளனர். இவ்வாறான சிறப்பம்சங்கள் பல காணப்படும் அதேவேளை மருந்துத்தட்டுப்பாடு, கிராமப் புறங்களில் வைத்தியர்களின் போதாமை, தரமற்ற மருந்துகளின் இறக்குமதி முதலான குறைபாடுகளும் நிலவுகின்றன. இவ்விடயங்களை உள்ளடக்கியதாக ஒரு **விளக்கக் கட்டுரை**.

(ii) தனது இடைநிலைக் கல்வியை முடித்துக்கொண்டு, வெளிநாடு சென்று வேலைவாய்ப்பைப் பெற்று, தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் வாழ்வாதாரத்தைப் பெற ஓர் இளைஞன் விரும்புகிறான். அவனது நண்பனோ, இங்கேயே அரச உத்தியோகத்தைப் பெற்று அல்லது சுயவேலையொன்றைச் செய்து தன்னையும் தன் குடும்பத்தினரையும் பேணுவது சிறந்தது என நம்புகிறான். இவ்விருவருக்குமிடையே இடம்பெற்ற ஓர் **உரையாடல்**.

(iii) ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெறுவது இன்றியமையாதது ஆகும். தேர்தல் மூலம் மக்களது ஜனநாயக உரிமை பாதுகாக்கப்படுகின்றது; அரசாங்கம் பற்றிய மக்களது அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றது; பொருத்தமான புதியதொரு அரசைத் தெரிவுசெய்ய முடிகிறது. தேர்தலின் முக்கியத்துவம், அதனாலேற்படும் நன்மைகள் போன்றவற்றை வலியுறுத்தி, பாடசாலை மாணவர் மன்றத்தில் நீர் நிகழ்த்தும் ஒரு **மேடைப்பேச்சு**.

(iv) குமரனும் விமலனும் மாணவப் பருவத்தில் மிகவும் நெருங்கிய நண்பர்கள். பாடசாலை வாழ்க்கை முடிந்த பின்னரும் அவர்கள் நட்புத் தொடர்ந்தது. ஆனால், சமூக வலைத்தளப் பதிவு ஒன்றினால் ஏற்பட்ட தவறான புரிதல் காரணமாக இருவரும் பல ஆண்டுகளாகப் பேசிக்கொள்ளாத நிலை ஒன்று ஏற்பட்டது. இப்போது நடைபெற ஏற்பாடாகியுள்ள 'மீண்டும் பள்ளிக்கு..........' நிகழ்ச்சியில் இருவரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
இவற்றை அடிப்படையாகக் கொண்டு, நட்பின் வலிமையை வெளிப்படுத்தும் வகையிலான ஒரு **சிறுகதை**.

(25 புள்ளிகள்)

**(i) மாதிரித் தலைப்புகள் :** மருத்துவத்துறையின் சிறப்பம்சங்களும் குறைபாடுகளும்
மருத்துவத்துறையின் இன்றையநிலை
மருத்துவத்துறையை மேம்படுத்துவோம் (இவை போன்றன)

- எமது நாட்டின் சுகாதாரத்துறை பற்றிய பொது விளக்கம்
- சுகாதாரத்துறையில் காணப்படும் சிறப்பம்சங்கள்
    - இலவச மருந்துவ வசதி
    - நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள்
    - உயர்தொழில்நுட்ப மருத்துவ உபகரண வசதி
    - பயிற்றப்பட்ட தாதிமார்களின் சேவை
    - குடும்பநல சுகாதார பரிசோதகர்களின் சேவை
    - தாய் - சேய் நலன் பேணும் சேவை
    - தடுப்பூசி வசதிகள்
- மருத்துவத்துறையின் குறைபாடுகள்
    - அவசிய மருந்துகள் சிலவற்றின் பற்றாக்குறை
    - வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்புக் குறைபாடுகள்
    - ஊழல் மோசடிகள்
    - நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள் வெளியேற்றம்

- மருத்துவத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்
    - சுகாதாரத்துறைக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல்
    - நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள், தாதிமார்களைச் சேவையில் இணைத்தல், அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்தல்.
    - தரமான மருந்து வகைகளை இறக்குமதி செய்தல்
    - வைத்திய சேவையைத் தரமுள்ளதாகவும் நவீனமாகவும் கட்டமைத்தல்
    - ஊழல்களைக் கட்டுப்படுத்தல்

(ii)

**மாதிரித் தலைப்புகள்**: வளமான தொழில்வாய்ப்பு உள்நாட்டிலா? வெளிநாட்டிலா?
வெளிநாட்டு மோகமும் உள்நாட்டு உழைப்பும் (இவை போன்றன)

- வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் பற்றிய கருத்துக்கள்
    - வெளிநாட்டு வேலை வாய்ப்பில் கூடிய வருமானம் ஈட்டுதல்
    - அந்நியச் செலாவணி நாட்டுக்குக் கிடைத்தல்
    - உள்நாட்டில் தொழில் வாய்ப்பின்மை
    - அரசாங்கத்தின் ஊக்குவிப்பு
    - வசதியான வாழ்க்கை வாய்ப்பு
    - சமூக அந்தஸ்து உயர்தல்

- தாய்நாட்டு வேலை வாய்ப்புக்கள் பற்றிய குறிப்புக்கள்
    - உள்நாட்டிலும் கௌரவமான தொழில்கள் உள்ளமை
      உதாரணம் :- சுயதொழில், அரச வேலைவாய்ப்புக்கள்
    - உள்நாட்டு வேலை வாய்ப்பால் குடும்ப, சமூக உறவுகள் பேணப்படுதல்
    - நாம் கற்ற கல்வியால் நமது நாட்டை விருத்தி செய்வது சிறந்தது

**குறிப்பு:**

- உரையாடல் அமைப்பில் அமைதல் வேண்டும்
- உரையாடல் இருவருக்கிடையே இடம்பெறல் வேண்டும்
- ஒருவர் கருத்தை மற்றவர் உள்வாங்கித் தர்க்கரீதியாக உரையாடுதல்

(iii) **மாதிரித் தலைப்புகள்:** தேர்தலின் அவசியம்
தேசத்தின் எதிர்காலம் தேர்தலில்
தேர்தல் ஒரு ஜனநாயக உரிமை (இவை போன்றன)

- தேர்தல் பற்றிய விளக்கம்
- தேர்தல் ஜனநாயக உரிமைக்கான அடிப்படை
- தேர்தலின் இன்றியமையாமை
- தேர்தல் உரிய காலத்தில் இடம்பெறவேண்டியதன் அவசியம்
- தேர்தலால் ஏற்படும் நன்மைகள்

**குறிப்பு** :- மேடைப்பேச்சு வடிவம் பேணப்பட வேண்டும்.

(iv)

**மாதிரித் தலைப்புகள்:** பிரிந்தவர் கூடினால்
இருள் விலகியது
நட்பின் வலிமை (இவை போன்றன)


- சிறுகதைக்குரிய அமைப்புக் காணப்படல்
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பனைச் செறிவுடன் எழுதுதல்
- கதையை சுவைபடவும் விறுவிறுப்பாகவும் யதார்த்தப்போக்கிலும் நகர்த்திச் செல்லுதல்
- கதைக்குப் பொருத்தமான மொழிநடையைக் கையாளுதல்
- முரண்பாடுகளுக்கு ஏதாவது சமூக வலைத்தளப் பதிவு காரணமாதல்
  - அனுமதி பெறாது புகைப்படங்களைப் பதிவேற்றல்
  - நண்பர் ஒருவர் பற்றி பொய்யான தகவலை சமூகஊடகம் மூலம் அறிதல்
- நட்பின் வலிமையை எடுத்துக்காட்டுவதான படிப்பினையை வெளிக்காட்டல்
- பொருத்தமான முடிவு

**(25 புள்ளிகள்)**

### 3.3.4 வினா இலக்கம் 2 இற்கான பகுப்பாய்வு

**வரைபு** 3.6

வினா இல. 2 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினா இலக்கம் 2 ஒரு கட்டாய வினாவாகும். இது நான்கு உப பகுதிகளைக் கொண்டது. பரீட்சார்த்திகள் இதில் ஏதாவது ஒன்றை மட்டும் தெரிவுசெய்தல் வேண்டும். இவ் வினாவிற்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகள் 25 ஆகும். இதில்,

00 – 06 வரையான புள்ளிப் பரம்பலில் 07% ஆனோரும்


07 – 12 வரையான புள்ளிப் பரம்பலில் 18% ஆனோரும்

13 – 18 வரையான புள்ளிப் பரம்பலில் 53% ஆனோரும்

19 – 25 வரையான புள்ளிப் பரம்பலில் 22% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் 13-18 இற்குள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு** 3.7

2 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினாப்பத்திரம் II இல், வினா இலக்கம் 2 ஆனது, கட்டுரை எழுதுதல் வினாவாகும். (iii) ஆவது வினாவானது 64% என்ற கூடிய இலகுதன்மையைக் காட்டுகின்றது. மேலும், (ii) ஆவது வினாவானது 32% என்ற குறைவான இலகுதன்மையைக் காட்டுகின்றது. (iii) ஆவது வினாவில் தேர்தலின் முக்கியத்துவம் தொடர்பான மேடைப்பேச்சு ஒன்றினை எழுதுமாறு கோரப்பட்டிருந்தது. இதற்கு கூடுதலான புள்ளிகள் பெறப்பட்டுள்ளமை ஜனநாயகம், தேர்தல் தொடர்பில் மாணவர்களின் அறிவை இது காட்டுகின்றது.

(ii) ஆவது வினா வெளிநாட்டு வேலை மற்றும் உள்நாட்டில் தொழில் செய்வது தொடர்பான உரையாடல் ஒன்றை எழுதுமாறு கோரப்பட்டது. இதற்கு குறைந்தளவு புள்ளிகள் பெற்றமை இவ் எண்ணக்கருக்கள் தொடர்பில் மாணவர்களுக்கு போதிய தெளிவின்மையை எடுத்துக்காட்டுகின்றது.

## 3.3.5 வினா இலக்கம் 3 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

'ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் அதிர்ஷ்டம் இருக்கிறது' என்று உழைப்பில் நம்பிக்கையில்லாதவர்கள் தான் சொல்வார்கள். உண்மையில், வாழ்க்கையில் வெற்றி பெறுவதில் உழைப்புத்தான் முழுப்பங்கு வகிக்கிறது.

புகழ்பெற்ற விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தால் அவர்கள் எப்படி புதிய கண்டுபிடிப்புகளை உலகுக்கு வழங்கினார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும். 'உழைப்பு! இடைவிடாத உழைப்பு!' என்பதே அவர்களது தாரக மந்திரமாக இருந்தது. சோர்வு இல்லாத இடத்தில்தான் செல்வம் வந்து சேரும். ஒரு செயலைப் பிற்போடுதல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகிய நான்கும் நல்வாழ்க்கை வாழ்வதற்கு முட்டுக்கட்டைகள் ஆகும். அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் எதுவுமில்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால்தான் வெற்றிபெற முடியும்.

'எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. விதிப் பலனாக செய்ய முடியவில்லை' என்று கூறுவதெல்லாம் சோம்பேறிகளின் கூற்றுக்களே. மனிதர்களிடம் ஒவ்வொரு விதமான பலவீனம் அமைந்திருப்பது இயல்பு. அதைப்பற்றியே நினைத்து தளர்வடைந்துவிடக் கூடாது. மாறாக 'செயல், செயல்!' என்று துடிப்புடன் துள்ளித் திரிந்து வாழ்க்கைப் பாதையில் இராஜநடை போட வேண்டும். உழைப்பை நம்பினால் மட்டுமே உயர்வு பெறலாம். 'நம்மிடம் அறிவும் ஆற்றலும் உழைப்பும் இருப்பதால் நிச்சயம் நம்மால் வெற்றியடைய முடியும்' என்ற வேகம் நமது செயலில் இருக்க வேண்டும்.

(10 புள்ளிகள்)

சுருக்கம்

- வாழ்க்கையில் வெற்றி பெற உழைப்பே முக்கிய பங்கு வகித்தல்.
- இடைவிடாத உழைப்பிற்கு விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறு உதாரணமாதல்.
- சோர்வற்ற இடத்தில் செல்வம் சேர்தல்.
- அறிவும் ஆற்றலும் சேர உழைப்பதால் வெற்றி கிடைத்தல்.
- பலவீனத்தால் தளர்வடையாதிருத்தல்.
- அறிவும் ஆற்றலும் உழைப்பும் வெற்றிக்கு அவசியமாதல்.


| | | |
|---|---|---|
| **விடய உள்ளடக்கம்** | - | **06 புள்ளிகள்** |
| **சொல்லளவு** | - | **02 புள்ளிகள்** |
| **மொழிநடை** | - | **02 புள்ளிகள்** |

- **40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.**
- **35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**
- **35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான புள்ளிகளில் ஒன்றைக் குறைக்கவும்.**
- **சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.**
- **சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.**
- **சொற்களை எண்ணும்போது நிதானமாகக் கணக்கிடவும்.**

### 3.3.6 வினா இலக்கம் 3 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.8**

வினா இல. 3 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினா இலக்கம் 3 ஆனது கட்டாய வினாவாகும். இவ்வினா சுருக்கம் எழுதுதல் வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்த புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00 – 02 வரையான புள்ளிப் பரம்பலில் 04% ஆனோரும்

03 – 05 வரையான புள்ளிப் பரம்பலில் 15% ஆனோரும்


06 – 07 வரையான புள்ளிப் பரம்பலில் 36% ஆனோரும்

08 – 10 வரையான புள்ளிப் பரம்பலில் 45% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ் வினாவிற்கு 07 இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 45% ஆகும். இரண்டு புள்ளிகளுக்கும் குறைவாகப் பெற்றவர்கள் 4% ஆகும்.

**வரைபு 3.9**

3 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினாப்பத்திரம் II இல், வினா இலக்கம் 3 இல் சுருக்கம் எழுதுவதற்கு வழங்கப்பட்ட உரைப்பகுதி பரீட்சார்த்திகளுக்கு இலகுவாக வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடியவாறு எளிய மொழிநடையில் அமைந்திருந்தமையாலேயே இவ்வினாவின் இலகுதன்மை கூடியதாக இருந்திருக்கலாம் எனக் கருதமுடியும்.

## 3.3.7 வினா இலக்கம் 4 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

போட்டி, போட்டி, போட்டி; எங்கும் போட்டி, எதிலும் போட்டி. இது நாகரிகத்தின் இயல்பாகிவிட்டது. இப்போட்டிகளாலே வாழ்க்கை அமைதி இழந்து வருகிறதென்பதை மக்கள் உணரவில்லை. காந்தியடிகள் போட்டியை விரும்பாதவர். எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என்ற தெளிவுபெற்ற அவருடைய உள்ளம் போட்டிகளுக்கு இடந்தரவில்லை.

மனித இனமானது, புதுப்புதுக் கருவிகளைப் பெற்று, வாழ்க்கைச் சுமைகளைக் குறைத்து அமைதி பெறுமென விஞ்ஞானிகள் நம்பினர். அறிவியல் வளர்ச்சியில் வாழ்வு எளிதாகுமென்பது அவர்கள் எதிர்பார்ப்பு. ஆனால், மனித மனம் எளிமையை நாடவில்லை. இரண்டு கையுடையவன் மூன்று மூட்டைகள் சுமக்க விரும்பினான். மூன்றாவதாகக் கைபெற்றால் நான்கைந்து மூட்டைகள் சுமக்க அவாப்பட்டான். இந்நிலையே புதிய வாய்ப்புகளிலும் ஏற்பட்டது. இதனால் அமைதி இழந்து அல்லல் பெருகுகின்றது.

அமைதியின் விழுப்பத்தை உணர்த்தவே அன்று ஓர் இளவரசர் அரச மாளிகையைத் துறந்து புத்தராக, போதிமர நிழலை அடைந்தார். எதிர்காலத்தில் இத்தகைய சான்றோர் பலரும் தோன்றி, போட்டி குறைந்த - அமைதியான - சமுதாயத்தை அமைக்கப் பாடுபடவேண்டியிருக்கும். இல்லையேல், மனித இனம் விஞ்ஞான யுகத்தில் ஏனைய எல்லாவற்றையும் பெற்றபோதும், வாழ்வின் அடிப்படையை இழந்து வருந்தும்.

(i) நாகரிகத்தின் இயல்பாக இங்கு சுட்டப்பெறுவது யாது?

(ii) விஞ்ஞானிகளது எதிர்பார்ப்பு யாது?

(iii) அமைதியின் பெருமையறிந்த சான்றோராக இங்கு குறிப்பிடப்படும் இருவரும் யாவர்?

(iv) மனிதரின் எல்லையற்ற ஆசையை எடுத்துக்காட்டும் வசனத்தை எழுதுக.

(v) வாழ்வின் அடிப்படையாக இங்கே கருதப்படுவது யாது?

(10 புள்ளிகள்)

(i) போட்டி

(ii) அறிவியல் வளர்ச்சியில் வாழ்வு எளிதாகும்.

(iii) காந்தி, புத்தர்

(iv) மூன்றாவதாகக் கைபெற்றால் நான்கைந்து மூட்டைகள் சுமக்க அவாப்பட்டான்.


(v) அமைதி

**(02 x 5 = 10 புள்ளிகள்)**

### 3.3.8 வினா இலக்கம் 4 இற்கான பகுப்பாய்வு

**வரைபு** 3.10

வினா இல. 4 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினா இலக்கம் 4 ஒரு கட்டாய வினாவாகும். இவ் வினாவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00 – 02 வரையான புள்ளிப் பரம்பலில் 08% ஆனோரும்

03 – 05 வரையான புள்ளிப் பரம்பலில் 25% ஆனோரும்


06 – 07 வரையான புள்ளிப் பரம்பலில் 30% ஆனோரும்

08 – 10 வரையான புள்ளிப் பரம்பலில் 37% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 6 அல்லது அதற்கு மேல் 67% ஆனோர் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு** 3.11

4 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினாப்பத்திரம் II இல், வினா இலக்கம் 4 ஆனது 5 உப பிரிவுகளைக் கொண்ட கிரகித்தல் வினாவாகும். இவ் வினாவின் உப பிரிவுகள்; (i) ஆனது 94% இலகுதன்மையைக் கொண்டுள்ளது. உப பிரிவுகள் (ii), (iii), (v) ஆகியவை 60% க்கு மேற்பட்ட இலகுதன்மையினைக் காட்டுகின்றது. உப பிரிவுகள் (iv) ஆனது, 29% ஆன இலகுதன்மையைக் காட்டுகின்றது. எனவே, இவ்வினா பரீட்சார்த்திகளுக்குக் கடினத்தன்மை உடையதாக அமைந்திருக்கலாம்.

## 3.3.9 வினா இலக்கம் 5 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**5.** தொடர்ந்து பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாலையூர் பிரதேச விவசாய நிலங்கள் பல, பாதிப்புக்குள்ளாயின. அதனால் நட்டமடைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி, பாலையூர் விவசாயக் கழகச் செயலாளர் எம். எம். கமால் என உம்மைக் கருதி, அப்பிரதேச இடர் முகாமைத்துவ நிலையப் பணிப்பாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

**அல்லது**

கடந்த வாரம் அறிவொளி மகாவித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. பல துறைகளும் சார்ந்து இடம்பெற்ற இக்கண்காட்சியின் ஒழுங்கமைப்புக் குழுவின் செயலாளர் ச. பூங்கோதை என உம்மைக் கருதி, பாடசாலை அதிபருக்கு, பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக **100** சொற்களில் **அறிக்கை** ஒன்று எழுதுக.

- காலம், இடம்
- பிரதம விருந்தினர் வருகை
- வெவ்வேறு துறைகளும் காட்சிப்பொருட்களும்

(15 புள்ளிகள்)

**கடிதம்**

**அமைப்பு**

| | | |
|---|---|---|
| - முகவரி | - | 01 புள்ளி |
| - உள்முகவரி | - | 01 புள்ளி |
| - விளிப்பு | - | 01 புள்ளி |
| - தலைப்பு | - | 01 புள்ளி |
| - பதவி, ஒப்பம் | - | 01 புள்ளி |
| | **-** | **05 புள்ளிகள்** |

| | | |
|---|---|---|
| **உள்ளடக்கம்** | **-** | **07 புள்ளிகள்** |
| **மொழிநடை** | **-** | **03 புள்ளிகள்** |
| **மொத்தம்** | | **15 புள்ளிகள்** |

(தரப்பட்ட தரவுகளுக்கமைய முகவரி முதலானவை அமைதல் வேண்டும்)

**தலைப்பு** : வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கோரல் (இது போன்றன)

**உள்ளடக்கம்**

- அடைமழையினால் ஏற்பட்ட வெள்ளம்
- விவசாய நிலங்கள் பாதிப்பு, பயிர்களின் அழிவு
- விவசாயிகள் நட்டமடைதல்
- மதிப்பீடு செய்து நிவாரணங்கள் வழங்கக் கோருதல்

**அறிக்கை**

**அமைப்பு**

| | |
|---|---|
| தலைப்பு | - 01 புள்ளி |
| உப தலைப்புகளில் / பந்திகளில் எழுதுதல் | - 01 புள்ளி |
| இடம் , காலம் | - 01 புள்ளி |
| பதவி , ஒப்பம் | - 01 புள்ளி |
| திகதி | - 01 புள்ளி |
| | **(05 புள்ளிகள்)** |

**உள்ளடக்கம் - 07 புள்ளிகள்**
**மொழிநடை - 03 புள்ளிகள்**

**மொத்தம் 15 புள்ளிகள்**

தலைப்பு - அறிவொளி மகா வித்தியாலயத்தின் கண்காட்சி / கல்விக் கண்காட்சி
(இது போன்ற தலைப்பு)

**உள்ளடக்கம்** -

காலம், இடம்

ஆரம்ப நிகழ்வுகள் - பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் வருகையும் வரவேற்றலும்
- வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தல்

**வெவ்வேறு துறைகளுக்கான காட்சிப் பொருட்கள் பற்றிய விபரம்**


- விஞ்ஞானம், வரலாறு, அழகியல், கைப்பணி, தொழிநுட்பம், ஓவியம்
- மாணவர்களின் ஆக்கமும் பங்குபற்றுதலும்
- பார்வையாளர்களும் அவர்களது பாராட்டுக்களும்

**(15 புள்ளிகள்)**

### 3.3.10 வினா இலக்கம் 5 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 3.12**

வினா இல. 5 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம்** : **RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினா இலக்கம் 5 ஒரு கட்டாய வினாவாகும். இது பரீட்சார்த்திகள் இடையே பிரயோக ஆவணங்கள் எழுதும் திறனை மதிப்பிடும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 15 ஆகும். இதில்,

00 – 03 வரையான புள்ளிப் பரம்பலில் 07% ஆனோரும்

04 – 07 வரையான புள்ளிப் பரம்பலில் 18% ஆனோரும்


08 – 11 வரையான புள்ளிப் பரம்பலில் 45% ஆனோரும்

12 – 15 வரையான புள்ளிப் பரம்பலில் 30% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இதன்படி 75% ஆன பரீட்சார்த்திகள் 7 க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு** 3.13

5 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம்** : **RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினாப்பத்திரம் II இல், வினா இலக்கம் 5 இல் 2 உப பிரிவுகள் காணப்படுகின்றன. தொழில்முறைக் கடிதமும் அறிக்கையும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுதல் வேண்டும். தொழில்முறைக் கடிதத்தின் இலகுதன்மை 62% ஆகும். அறிக்கையின் இலகுதன்மை 24% ஆகும். அறிக்கையை விட தொழில்முறை கடிதம் இலகுதன்மை கூடியதாக காணப்படுகின்றது.

தொழில்முறைக் கடிதம் பரீட்சார்த்திகளின் அன்றாட வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வாகக் காணப்பட்டமையினால் இது இலகுதன்மை கூடியதாக அமைந்திருக்கலாம். மேலும், அறிக்கை எழுதுவதற்கு மாணவர்களுக்குத் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் பரீட்சார்த்திகளின் அறிக்கை எழுதும் திறனை மேம்படுத்த முடியும். அறிக்கையின் அமைப்பு தொடர்பில் பரீட்சார்த்திகளுக்கு போதிய விளக்கமும் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும்.

# பகுதி IV

## 4. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் - வினாப்பத்திரம் - III

### 4.1 தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரம் III இன் கட்டமைப்பு

### வினாப்பத்திரம் - III

வினாத்தாள் III - 02 மணித்தியாலங்கள்

7 வினாக்களைக் கொண்டது.

மொத்தப் புள்ளிகள் 80 ஆகும்.

1, 2, 3, 4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. வினாக்கள் 5, 6, 7 இல் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

வினா இல. **1** : குறுவிடை வினாக்கள் 10. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

வினா இல. **2** : விதிக்கப்பட்ட பாடநூலிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட செய்யுள், உரைநடைப்பகுதிகளை உள்ளடக்கிய 5 பகுதிகளைக் கொண்டது. ஒரு வினாவுக்கு 4 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

வினா இல. **3** : இரண்டு தெரிவு வினாக்களில் ஒன்றுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 15 ஆகும்.

வினா இல. **4** : இரண்டு தெரிவு வினாக்களில் ஒன்றுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும். இவ்வினாக்குரிய புள்ளிகள் 15 ஆகும்.

வினா இல. **5, 6, 7** : மூன்று தெரிவு வினாக்களில் ஒன்றுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும். இவ்வினாக்குரிய புள்ளிகள் 10 ஆகும்.


| | | | | |
|---|---|---|---|---|
| இறுதிப் புள்ளியைக் கணித்தல் : | வினாப்பத்திரம் I | = 40 | | |
| : | வினாப்பத்திரம் II | = 80 | | |
| : | வினாப்பத்திரம் III | = 80 | | |
| | இறுதிப்புள்ளி | = 200/2 | = | 100 |

**மூலம்** : க.பொ.த (சா..தரம்) வினாப்பத்திரக் கட்டமைப்பு மற்றும் முன்னோடி வினாக்கள், 2016, இ.ப.தி

## 4.2 வினாப்பத்திரம் III இற்கான பகுப்பாய்வு

**வரைபு** 4.1


வினாப்பத்திரம் III இன் வினாக்களைத் தெரிவுசெய்துள்ள விதம்




**மூலம்** : **RD/16/03/0L** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

**வரைபு** 4.2

வகுப்பாயிடைக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு





**மூலம்** : **RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினாத்தாள் III இற்கு விடையளித்தலில் கூடுதலான பரீட்சார்த்திகள் 1, 2, 3, 4, 5, 7 ஆகிய வினாக்களுக்கு 0% - 25% ஆன வகுப்பாயிடையிலேயே கூடுதலாகப் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 6 ஆம் வினாவுக்கு மாத்திரம் 76% - 100% வரையான வகுப்பாயிடைக்குள் கூடுதலாகப் புள்ளிகளை பெற்றுள்ளனர். 7 ஆம் வினாவிற்கு விடையளித்த பரீட்சார்த்திகள் 0% - 25% ஆன வகுப்பாயிடைக்குள் 60% இலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளதானது, இவ்வினாவுக்குப் பரீட்சார்த்திகள் விடையளிப்பதில் இடர்பட்டுள்ளனர் என்பதனை வெளிப்படுத்துகின்றது.

**வரைபு 4.3**

வினாப்பத்திரம் III இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

## 4.3 வினாப்பத்திரம் III இற்கான வினாக்கள் தொடர்பான விசேட அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

### 4.3.1 வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே"

(அ) சினை

(ஆ) நுண்ணிது

ஆகியவற்றின் பொருளைத் தருக.

(ii) "பிரசண்ட மாருதத்துக்குப் பிறகு என்று சொல்லுகிற 'பிறகு' அந்தச் சபையில் நிலவியது"

(அ) பிரசண்ட மாருதம் என்றால் என்ன?

(ஆ) இங்கு 'பிறகு' என்ற சொல்லால் குறிப்பிடப்படுவது யாது?

(iii) "கையில் அகல செம்புக் காப்புக்களென அமர்க்களமாய் பார்க்க அம்சமாய் இருப்பா"

(அ) அமர்க்களம் என்பதன் நேர்ப்பொருள் யாது?

(ஆ) அது இங்கே என்ன பொருளில் வழங்குகிறது?

(iv) "வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே"

(அ) பிறையை 'வெங்கட் பிறை' என்று கூறுவதன் காரணம் யாது?

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணியை இனங்கண்டு விளக்குக.

(v) "கடுமையார் கானகத்துக் கருணையார் கலி ஏக"

(அ) கடுமையார் கானகத்துக்கு ஏகியவரின் பெயர் யாது?

(ஆ) இங்கு 'கலி' என்பதன் பொருள் யாது?

(vi) "இப்போ இந்த மலையைப் பிரிவது மலையைவிடக் கூடுதலாகக் கனக்கிறதே, ஆனால், என் அருமைச் செல்வங்களே... புறப்பட வேண்டியதுதான்."

(அ) பறம்பு மலையைப் பிரிவதில் உள்ள அதிக வேதனை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

(ஆ) அதைப் பிரிந்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தை உணர்த்தும் தொடர் யாது?

(vii) "அரவு உயர்த்தோன் கொடுமையினும் முரசு உயர்த்தோய்
உனது அருளுக்கு அஞ்சினேனே"

இக்கூற்று,

(அ) யாரால் கூறப்பட்டது?

(ஆ) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

(viii) "அன்னநடை மைவிழியா எம்பொன்மலர்க் கொம்பனையாள்
என்னிதய தாமரைக்கோ ரிலக்குமியாம்"

இந்தச் செய்யுட் பகுதியிற் காணப்படும்,

(அ) உவமையணி ஒன்றை இனங்கண்டு குறிப்பிடுக.

(ஆ) உருவக அணி ஒன்றை இனங்கண்டு குறிப்பிடுக.

(ix) "மறையென லறியா மாயமி லாயம்"

(அ) இங்கு ஆயம் என்ற சொல் யாரைச் சுட்டுகிறது?

(ஆ) அந்த ஆயத்தின் சிறப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(x) “ஏர் தழைக்கவேணும் தம்பிரானே
எல்லோரும் வாழவேணும் தம்பிரானே”

(அ) ஏர் என்பதற்கு நிகரான பிறிதொரு சொல்லைக் குறிப்பிடுக.

(ஆ) ‘ஏர் தழைக்க வேணும்’ என்ற தொடரால் உணர்த்தப்படுவது யாது?

(20 புள்ளிகள்)

## பகுதி III

(i) (அ) சினை – முட்டை

(ஆ) நுண்ணிது – சிறியது

(ii) (அ) பிரசண்ட மாருதம் - சூறாவளிக்காற்று / புயல்

(ஆ) பிறகு - அமைதி

(iii) (அ) போர்க்களம் / யுத்தகளம்

(ஆ) சிறப்பு / அழகு

(iv) (அ) வெங்கட்பிறை - பிரிந்த காதலர்களுக்கு வருத்தம் ஏற்படுத்துவதால்

(ஆ) உருவக அணி - விழி வேலாக உருவகிக்கப்பட்டுள்ளது.

(v) (அ) இராமன்

(ஆ) கடல்

(vi) (அ) மலையை விட கனக்கிறது என்பதனூடாக

(ஆ) புறப்பட வேண்டியதுதான்

(vii) (அ) யாரால் - வீமனால்

(ஆ) தர்மன் மீண்டும் சமாதானத்தை வலியுறுத்தி கிருஷ்ணனைத் தூது போகும்படி கேட்ட சந்தர்ப்பத்தில்

(viii) (அ) உவமையணி - அன்னம் போன்ற நடை / மலர்க் கொம்பு அனையாள்

(ஆ) உருவக அணி - இதயத்தாமரை / இலக்குமி

(xi) (அ) ஆயம் - நண்பர்கள் / நண்பர் கூட்டம்

(ஆ) மறை அறியாதவர் / மாயம் இல்லாதவர்

(x) (அ) ஏர் - மேழி / கலப்பை


(ஆ) விவசாயம் / வேளாண்மை சிறக்க வேண்டும்

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

### 4.3.2 வினா இலக்கம் 1 இற்கான பகுப்பாய்வு

**வரைபு** 4.4

வினா இல. 1 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம்** : **RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

இது ஒரு கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இதில்,

0 - 5 வரையான புள்ளிப் பரம்பலில் 39% ஆனோரும்

6 - 10 வகையான புள்ளிப் பரம்பலில் 35% ஆனோரும்


11 - 15 வரையான புள்ளிப் பரம்பலில் 22% ஆனோரும்

16 - 20 வகையான புள்ளிப் பரம்பலில் 4% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 74% ஆனோர் 10 இற்கும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 26% ஆனோர் 10 இற்கும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு** 4.5

1 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம்** : **RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

1 ஆம் வினா 10 குறுவிடை வினாக்களைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் (i), (vi), (viii) ஆகிய வினாக்கள் கூடுதல் இலகுதன்மை உடையனவாகக் காணப்படுகின்றன. ஏனைய வினாக்கள் அனைத்தும் 50% க்கும் குறைவான இலகுதன்மையைக் காட்டுகின்றன. வினா இலக்கம் (iv), (ix) ஆகிய வினாக்கள் கூடுதல் கடினத்தன்மையை வெளிக்காட்டுகின்றன.

1 ஆம் வினாவின் உபபிரிவு (iv) இன் ‘அ’ பிரிவு 4% ஆன இலகுதன்மையையும் ‘ஆ’ பிரிவு 31% ஆன இலகுதன்மையையும் கொண்டுள்ளன. இவ்வினா புகழேந்திப் புலவரின் தனிப் பாடலிலிருந்து கேட்கப்பட்டுள்ளது. ‘அ’ பகுதியில் ‘வெங்கட்பிறை’ எனக் கூறுவதற்கான காரணம் பற்றிக் கேட்கப்பட்டதற்கு மாணவர்கள் விடையளிக்கச் சிரமப்பட்டுள்ளனர்.

அதேவேளை உப பிரிவு (ix) ஆனது புறநானூறு பாடல் பகுதியிலிருந்து வினவப்பட்டுள்ளது. இதில் ‘அ’ பகுதி வினாவுக்கு 4% ஆன இலகுதன்மையே காணப்படுகிறது. ‘ஆயம்’ என்ற சொல் யாரைச் சுட்டுகிறது? எனக் கேட்கப்பட்டதற்கு மாணவர்கள் விடையளிக்கச் சிரமப்பட்டுள்ளனர். எனவே பாடல் பகுதிகளைக் கற்பிக்கும் போது பதங்களைப் பிரித்து தனித்தனியான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள வழிப்படுத்தவேண்டும்.

## 4.3.2 வினா இலக்கம் 1 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து
வீங்கக் காண்பன மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
யேங்கக் காண்பது மங்கலபேரி
யீச ராரிய நாடெங்கள் நாடே.

(அ) ஆரிய நாட்டின் வளம்
(ஆ) அந்நாடு ஒரு புண்ணிய தலம்
என்பன எவ்வாறு உணர்த்தப்படுகின்றன?

(ii) வயிரம் எனும் சுடுநெருப்பை மிகமூட்டி
வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்.

(அ) பகைவளர்க்கின் இரு பக்கத்தாரும் அழிந்துபடுவர் என்பதை வெளிப்படுத்துவதற்கு கையாண்டுள்ள உவமை
(ஆ) 'சந்துபட உரைத்தருள்' என்ற தொடர்
ஆகியவற்றை விளக்குக.

(iii) ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.

(அ) சிலேடையாக இங்கே ஒப்பிடப்படுவன யாவை?
(ஆ) இந்த ஒப்பீடு பொருத்தமாக அமையும் தன்மையை விளக்குக.

(iv) சேர். பொன். இராமநாதன் துரைக்கு அப்போது இருபத்தைந்து வயசு. சிரித்த முகம்; தங்க சொரூபம்; அப்பொழுதுதான் சென்னைப் பட்டணத்திலிருந்து படித்துவிட்டு வந்தவர். யாழ்ப்பாணத்தவரேயாயினும் யாழ்ப்பாணத்தவர்க்கு அவரைப் பற்றி ஒன்றுந் தெரியாது. யாழ்ப்பாணம் வந்திருக்கின்றார்.

பிறிற்றோ என்பவர் பிரசித்திபெற்ற வழக்கறிஞர். அக்காலத்து சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர் அவர். இலங்கையிலேயுள்ள எல்லாரும் அவரை அறிவர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்கு பெரிய பேர். பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். அவருக்கு யாழ்ப்பாணத்தில் அளவுகடந்த செல்வாக்கு அந்த நாட்களில் இருந்தது.

(அ) 'பிறிற்றோ பிரசித்திபெற்ற வழக்கறிஞர்' என்பது எவ்வாறு உணர்த்தப்படுகிறது?
(ஆ) சேர். பொன். இராமநாதனின் பிரசித்தமின்மையும் பிறிற்றோவின் அதிக பிரசித்தமும் பற்றிய இந்த விபரிப்பு, நாவலரின் வாதத் திறமையை உணர்த்துவதற்கு எவ்வகையில் உதவுகிறது?

(v) இலட்சியவாதிகளின் தூலவடிவங்கள் மறைந்தாலும், இலட்சியங்கள் மறைந்து போவதில்லை. அவை நம்முள்ளத்தே கலந்து நம்மை ஆட்கொண்டு நிற்கின்றன. அவை அழியாநிலை பெற்றவை. தூலவடிவில் நின்றும் மறைந்த இலட்சிய புருடர்களை இயற்கைப் புலமையும் அறிவுத் தெளிவுமுள்ள உண்மைக் கவிஞர்கள் காவியங்களிலே சூக்கும வடிவில் அமைத்துக் காட்டுகின்றார்கள். இவ்வற்புதக் காட்சியில் இலக்கிய புருடர்களைக் காணாமற் கண்டு பேரானந்தம் அடைகின்றோம். இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம். இதேபோன்று இலக்கியங்களும் அபின்னம். இலக்கியங்களுடன் அபின்னமாய் நின்று உணர்வார்க்கு இவை புலனாகும். நூறாண்டு கழிந்தாலும் உண்மை இலக்கியங்கள் புதுமை பெற்று உள்ளங்களைத் தளிர்த்து மலரச்செய்கின்றன.

(அ) 'தூலவடிவில் நின்றும் மறைந்த இலட்சிய புருடர்களை சூக்கும வடிவில் அமைத்துக் காட்டுகின்றார்கள்' என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?

(ஆ) 'இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம்' இத்தொடரை விளக்குக.

(20 புள்ளிகள்)

(i) அ)
- வயல்களில் கரும்பும் செந்நெல்லும் காணப்படல்.
- மாம்பழங்கள் தொங்குதல்
- தயிர் கடையும் மத்துக்கள் சுழலல்.
- முல்லை அரும்புகள் விரிதல்

ஆ) அங்கு சேர்ந்தவர்களின் பாவம் நீங்குதல்

(ii) அ) வயிரம் எனும் சுடு நெருப்பை .......

தனித்தனி மூங்கில்கள் உரசிக் கொள்வதால் உண்டாகும் தீ, அக்காடு முழுவதையும் அழித்து விடல்

ஆ) சமாதானம் உண்டாக்கும் வகையில் உரைத்தல்

(iii) அ) பாம்பு, எள்

| பாம்பு | எள் |
|---|---|
| பாம்பு ஆடிய பின் குடத்தை அடையும் | செக்கிலிட்டு ஆடியபின் எண்ணையாக குடத்தை அடையும் |
| ஆடுகின்ற போது இரையும் | செக்கில் ஆட்டப்படும் போது இரைந்து சத்தம் உண்டாகும். |
| கூடையின் மூடியைத் திறக்கும் போது முகத்தைக் காட்டும் | எண்ணை ஊற்றப்பட்ட பாத்திரத்தின் மூடியைத் திறந்தால் பார்ப்பவரின் முகத்தைக் காட்டும். |
| விஷம் தலைக்கு ஏறும் போது பரபரத்தல் | தலையில் எண்ணெய் இடும்போது பரபரவென்று குளிர்ச்சியை ஏற்படுத்தும். |
| பிளவுபட்ட நாக்கு காணப்படும் | எள்ளிலிருந்து எடுத்த எண்ணெய் போக எஞ்சியது பிண்ணாக்காகும் |

(iv) அ) சட்ட நிபுணர்களில் தலை சிறந்தவர். பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்

ஆ) பொன் இராமநாதன் யாராலும் அறியப்படாதவராயும் பிறிற்றோ மிகப் பிரசித்தமானவராயும் இருந்த நிலையில், இராமநாதன் அவர்களை சட்டசபைக்குள் பிரதிநிதியாக மக்கள் தெரிவு செய்தது நாவலரின் வாதத்தின் விளைவே

(v) அ) உடலோடு கூடி வாழ்ந்து மறைந்த இலட்சியவாதிகளைக் கருத்து வடிவில் விபரித்தல்


ஆ) இலட்சியங்களையும் இலட்சியவாதிகளையும் பிரிக்க முடியாது. இலட்சியம் இல்லாமல் இலட்சியவாதிகள் இல்லை

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

### 4.3.4 வினா இலக்கம் 2 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.6**

வினா இல. 2 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி


இது ஒரு கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இதில்,

0 - 5 வரையான புள்ளிப் பரம்பலில் 39% ஆனோரும்
6 - 10 வரையான புள்ளிப் பரம்பலில் 34% ஆனோரும்
11 - 15 வரையான புள்ளிப் பரம்பலில் 20% ஆனோரும்
16 - 20 வரையான புள்ளிப் பரம்பலில் 7% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 73% ஆனோர் 10 இற்கும் குறைவான புள்ளிகளைப் பெற்ற அதேவேளை 27% ஆனோர் 10 இற்கும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு** 4.7

2 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

வினா இலக்கம் 2 இல் உப பிரிவு (iii) இன் வினாக்கள் இலகுதன்மை கூடிய வினாக்களாக அமைந்துள்ள அதேவேளை (ii), (v) ஆகிய வினாக்கள் இலகுதன்மை குறைந்தவையாகக் காணப்படுகின்றன.

மூன்று செய்யுள் பகுதிகளையும் இரண்டு உரைநடைப் பகுதிகளையும் கொண்ட இவ்வினாவில் இரண்டு பகுதிகளுமே பரீட்சார்த்திகளுக்குக் கடினத்தன்மை உடையவையாக உள்ளமையை அவதானிக்கலாம்.

(ii) ஆவது பாடல் பகுதி கிருட்டிணன் தூதுச்சருக்கப் பாடலிலிருந்து வினவப்பட்டுள்ளது. இதன் ‘அ’ பகுதிக்கு 26% இலகுதன்மையும் ‘ஆ’ பகுதிக்கு 22% இலகுதன்மையும் கொண்ட வினாவாக அமைந்துள்ளது. உவமை அணியை விளக்குவதிலும் தொடரின் பொருளை விளக்குவதிலும் மாணவர்கள் இடர்பட்டுள்ளனர். மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடல் பகுதியிலும் காணப்படுகின்ற அணிகளை இனங்காணவும் சொற்கள், சொற்றொடர்களை விளக்கவும் பயிற்சி வழங்குதல் வேண்டும்.

(v) ஆவது உப பகுதி ‘இலட்சியமும் சமநோக்கும்’ என்ற கட்டுரைப்பகுதியிலிருந்து வினவப்பட்டதாகும். இதன் ‘அ’, ‘ஆ’ ஆகிய வினாக்களுக்கு முறையே 25%, 14% ஆன இலகுதன்மைகளே கிடைத்துள்ளன. இதில் வாக்கியங்கள், சொற்றொடர்களில் கூறப்பட்ட கருத்துக்களை விளக்குவதற்கு மாணவர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

## 4.3.5 வினா இலக்கம் 3 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**3.** கம்பராமாயணம் **'குகப் படலத்தில்',**

(அ) கோசலையின் பெருமை

(ஆ) பாத்திர உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் கம்பன் காட்டும் திறன்
ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**'தத்தைவிடு தூது'** பகுதியில்,

(அ) அக்கால சமூகம் பெண்களை அடிமைப்படுத்திய விதம்

(ஆ) அச்சமூகத்தின்மீது தலைவன் கொண்ட கோபம்
என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

அ)

- உறவினர்கள் மாத்திரமின்றி தேவர்களும் வணங்குகின்ற பெருமையுடையவள்
- அரசர்கள் தன்னைக் காண்பதற்காக தங்கியிருக்கும் முன்றிலையுடைய தசரதனின் முதல் மனைவி
- மூன்று உலகும் ஈன்றவனாகிய பிரமனை முன்னீன்ற ஸ்ரீநாராயணனின் அவதாரமாகிய இராமனை மகனாகப் பெற்றவள்.
- அடைய வேண்டிய அரசுச் செல்வத்தை பரதன் காரணமாகத் துறந்த காரணத்தால் பெரியாள் எனச் சிறப்பிக்கப்படல்.

**(06 புள்ளிகள்)**

ஆ) துயர உணர்வு

- இராமன் பின்பு பிறந்தானும் உளன் .....
- பாழ்த்த பாவிக் குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கு உயிர்ப்பாரம் குறைந்து தேய.....
- நைவீர் அலீர் மைந்தீர் ......
- நெடிது வீழ்ந்து அழுவானை...
- கன்று பிரி காராவின் துயருடைய கொடி

வியப்புணர்வு

- யான் பிறத்தலால் துறந்த பெரியாள்

மகிழ்ச்சி

- நாடு இறந்து காடு நோக்கி மெய் வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்றாம்
- ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர்.

வெறுப்புணர்ச்சி

- படர் எல்லாம் படைத்தவள்
- பழி வளர்க்கும் செவிலி

- உடர் எல்லாம் உயிர் இல்லா எனத் தோன்றும் உலகத்தே ஒருத்தி அன்றே இடர் இல்லா முகத்தாளை
- சுடு மயானத்திடை தன் துணை ஏக தோன்றல் துயர்க்கடலின் ஏக கடுமையார் கானகத்து கருணையார் கலி ஏக
- நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாள்

அன்புணர்வு

- அன்பின் நிறைந்தாளை

**(09 புள்ளிகள்)**

**(06 + 09 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

அ)

- பெண்களை அழகாக வளர்த்து அறிவற்ற ஆண்களுக்கு மணம் முடித்துக் கொடுத்தல் (கொங்கு மலர் மாலையைக் குரங்கிற்கு அழிப்பது போல)
- எளியவருக்கும் முதிர்ந்தவர்களுக்கும் மணமுடித்து வைத்தல்
- வரதட்சணை கொடுத்து பெண்கள் வாழ்க்கைக்காலம் வரை புலியின் வாயில் அகப்பட்ட மான் போல துன்பப்படும் நிலைக்குத் தள்ளுதல்
- உண்பது, உறங்குவது, ஊர்க்கதைகள் பேசுவது மட்டுமே பெண்களின் தொழில், அடிமைகளுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு இல்லை, அவர்களுக்கு கணவனே கண்கண்ட தெய்வம் என்று எல்லாம் கூறல்
- கூட்டில் அடைத்து வைக்கும் கிளி போலவும் பூட்டித்திறந்து எடுக்கும் பொருளாகவும் பெண்களைக் கருதுதல்
- ஆண் என்ற ஒரு தகுதி இருந்தால் போதும் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கலாம் என கருதுதல்
- வீட்டிற்கு பசு வாங்கும் போது கூட பலமுறை ஆராய்கிறார்கள் ஆனால் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைக்கும் போது எந்த ஆராய்ச்சியும் இன்றி சடுதியாக முடிவெடுக்கிறார்கள்

**(08 புள்ளிகள்)**

ஆ)

- பொருத்தமற்ற வகையில் பெண்ணுக்கு திருமணம் செய்து வைப்பவர்களை விரகிலர் எனச் சாடுதல்
- பெண்களுக்கும் அடிமைகளுக்கும் போதமில்லை என்பவர்களை அறிவிலிகள் எனல்.
- வேடுவரைத் திருமணம் செய்து கொடுப்பதை விரும்புவோமோ? என வினாவுதல்.
- பெண்களை அவர்கள் விருப்பமின்றி திருமணம் செய்து கொடுக்கும் பெற்றோர் கண் இல்லாதவர் என்றும் கடு நரகிற்குரியவர் என்றும் சாடுதல்.
- பெண்கள் கல்வி கற்பதை விரும்பாதவர்களை வீணர் எனல்
- பெண்ணை வீட்டில் அடைத்து வைத்து எவற்றையும் ஆராயாது முன் பின் அறியாத ஒருவருக்கு அவளைத் திருமணம் செய்து வைத்தலை சாடுதல்.


**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

### 4.3.6 வினா இலக்கம் 3 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.8**

வினா இல. 3 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்





**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு

இது ஒரு கட்டாய வினாவாகும். இவ்வினா இரண்டு பகுதிகளைக் கொண்டது. இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.

0 – 3 வரையான புள்ளிப் பரம்பலில் 35% ஆனோரும்
4 – 7 வரையான புள்ளிப் பரம்பலில் 25% ஆனோரும்
8 – 11 வரையான புள்ளிப் பரம்பலில் 27% ஆனோரும்
12 – 15 வரையான புள்ளிப் பரம்பலில் 13% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 0 – 3 வரையான புள்ளிகளை 35% பெற்றுள்ளமை குறிப்பிட்டுக் காட்டவேண்டிய விடயமாகும்.

**வரைபு 4.9**

3 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

மூன்றாம் வினா இரண்டு பகுதிகளைக் கொண்டது. அதில் ஒரு பகுதியைத் தெரிவுசெய்து விடையளிக்க வேண்டும். முதலாம் பகுதி “குகப்படலத்தை” அடிப்படையாகக் கொண்டது. இதன் (அ) பகுதி இலகுதன்மை கூடியதாகவும் (56%), (ஆ) பகுதி இலகுதன்மை குறைந்ததாகவும் (26%) காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதன் 'அ' பகுதி பாத்திர உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் கம்பன் காட்டும் திறன் என்ற வினாவுக்கு 26% ஆன குறைவான இலகுதன்மையே காணப்படுகிறது. இத்தகைய விடயங்களை மாணவர்களுக்கு தெளிவூட்டுவது அதிகரிக்கப்பட வேண்டும்.

3 ஆம் வினாவின் இரண்டாம் பகுதி "தத்தை விடு தூது" என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டது. இதிலும் (அ) பகுதி இலகுதன்மை கூடியதாகவும் (53%) (ஆ) பகுதி இலகுதன்மை குறைந்ததாகவும் (33%) காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. 'ஆ' பகுதியில் 'பெண்களை அடிமைப்படுத்தும் சமூகம் மீதான தலைவனின் கோபம்' என்ற வினாவுக்கு 33% ஆன இலகுதன்மையே பெற்றுள்ளனர். இலக்கியங்கள், அதன் பகுதிகளில் கவிஞன் கூறும் விடயங்களைப் பகுத்து விளக்கமாகக் கற்பித்தல் வேண்டும்.

## 4.3.7 வினா இலக்கம் 4 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**4. 'கம்பியூட்டர்'** என்ற சிறுகதையில், கதைசொல்லிக்கு

(அ) கம்பியூட்டர் பற்றிய பரிச்சயமின்மையும்

(ஆ) கம்பியூட்டர் பற்றிய அறிவை அவர் பெற்றுக்கொண்ட வகையும்

புலப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**'எது நல்ல சினிமா'** என்ற கட்டுரையில்

(அ) ஆரம்பகாலத் தமிழ்ச் சினிமாவின் இயல்புகள்

(ஆ) நல்ல சினிமாவுக்கு அவசியமான தொழினுட்ப உத்திகள்

ஆகியவை புலப்படுத்தப்பட்டுள்ள விதத்தினை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

அ)

- கம்பியூட்டரின் தோற்றத்தைப் பார்த்துப் பயப்படுதல்
- முன் பின் தெரியாத விவகாரம், முந்திப்பிந்தி வாங்கியும் அனுபவம் இல்லை எனல்.
- கம்பியூட்டரில் ஆண், பெண் பேதம் இருப்பதாக நம்புதல்.
- கடைக்காரன் கம்பியூட்டர் பற்றிக் கூறிய எவற்றையும் விளங்கிக் கொள்ளமுடியாமை
- கம்பியூட்டர் வாங்குவதற்கான அறிவோ அனுபவமோ போதாமையினால் நண்பர் ஒருவரை அழைத்துச் செல்லல்
- நண்பனுக்கும் கடைக்காரனுக்கும் இடையில் நடந்த உரையாடலைப் புரிந்து கொள்ள முடியாது திண்டாடுதல்.
- 486 கம்பியூட்டர் என்பதைத் தவறாக விளங்கிக் கொள்ளல்
- கம்பியூட்டரைப் பயன்படுத்தும் அறிவு போதாமையினால் இடர்ப்படல்.

**(08 புள்ளிகள்)**

ஆ)

- கடையில் கதைசொல்லிக்கு தோதாக இருந்த ஒருவர் மூலம் கம்பியூட்டர் பற்றி அறிய முற்படல்
- கம்பியூட்டர் பற்றிய உண்மையைத் தானே கண்டறிதலும் சுயமாகத் தானே கம்பியூட்டரில் கதையை அடிக்க (**Type** பண்ண) முயல்வதும்
- அரவிந்தன் மூலம் கம்பியூட்டரைப் பயன்படுத்தும் நுணுக்கமான முறைகளைக் கற்றுக் கொள்ளுதல்.
- நண்பர் வாயிலாக கம்பியூட்டரை பயன்படுத்தும்போது அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ளுதல்.
- வெவ்வேறு டைரக்டரி உண்டாக்கி தம் படைப்புக்களைச் சேமித்து வைத்தல்.

**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

அ)

- தமிழ் சினிமா நாடகத்துக்கு அடிமைப்பட்டு இருந்ததனால் சினிமா வளராமை
- ஆரம்பத்தில் புராண நாடகங்களே படமாக்கப்பட்டமை
- நாடகம் மாதிரியே செட் போடப்பட்டு பார்ப்போர் கோணத்தில் இருந்து படமாக்கப்பட்டமை
- நடிகர், இயக்குநர், வசனகர்த்தா, பாடலாசிரியர் என அனைவரும் நாடகப் பின்புலத்தில் இருந்து வந்து சினிமாவில் ஈடுபட்டமை
- நாடகக் கம்பனிகளே சினிமாவைத் தயாரித்தமை
- வாய்ப்பேச்சால் கதையை விளக்க முற்பட்டமை
- சினிமாவில் நாடகத்தனம் மிகுந்திருந்தமை (காட்சி, ஒலி, குரல், அதீத பேச்சு)

**(08 புள்ளிகள்)**

ஆ)

- அழுத்தமான அழகான வரிசையான காட்சிப் படிமங்கள் மூலம் கதையை வெளிப்படுத்துதல்
- காட்சிப்படிமத்துக்கு தாங்கலாக ஒலி அமைந்து இருத்தல். அவ்வொலி பல வகைகளிலும் கையாளப்படுதல்.
- காட்சிப்படிமங்களும் ஒலிப்பதிவுகளும் அர்த்தமுள்ள கோர்வையாக அமையும் வகையில் படத்தொகுப்பு அமைதல்.
- காட்சிப்படிமங்களை இணைக்கும் முறையைக் கையாளல்
- காமிரா, லென்ஸ், ஒளி விளக்குகள், ஒலிப்பதிவுநாடா, ஒளியெறிதல் முதலியன சினிமா மொழியை விளக்கக் கையாளப்படல்.
- புதுப் புது தொழினுட்ப சாதனங்கள் சினிமா மொழியை வளப்படுத்தல்
- குறியீடுகள் மூலம் மையக்கருத்தை வலியுறுத்தல்.


**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

### 4.3.8 வினா இலக்கம் 4 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.10**

வினா இல. 4 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு


இது ஒரு கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 15 ஆகும். இதில்,

0 – 3 வரையான புள்ளிப் பரம்பலில் 43% ஆனோரும்
4 – 7 வரையான புள்ளிப் பரம்பலில் 26% ஆனோரும்
8 – 11 வரையான புள்ளிப் பரம்பலில் 22% ஆனோரும்
12 - 15 வரையான புள்ளிப் பரம்பலில் 9% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 43% ஆனோர் 3 புள்ளிகள் அல்லது அதிலும் குறைவாகப் பெற்றுள்ளனர். அதேவேளை 31% ஆனோர் 8 - 15 வரையான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 4.11**

4 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

நான்காம் வினா இரு பகுதிகளைக் கொண்டது. அதில் ஒரு பகுதியை தெரிவுசெய்து விடையளிக்க வேண்டும். முதலாம் பகுதி “கம்பியூட்டர்” என்ற சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இதில் (அ) உப பகுதியானது 43% ஆன இலகுதன்மை கொண்டதாகவும் (ஆ) உப பகுதியானது 33% ஆன குறைவான இலகுதன்மை உடையதாகவும் காணப்படுகின்றது. நான்காம் வினாவின் இரண்டாம் பகுதி "எது நல்ல சினிமா" என்ற பாடப்பரப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இதில் (அ) உப பகுதியானது பகுதி 41% ஆன இலகுதன்மையுடையதாகவும், (ஆ) உப பகுதியானது 39% ஆன இலகுதன்மையுடையதாகவும் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

சிறுகதை மற்றும் உரைநடைப் பாடங்களைப் பகுத்தும் தொகுத்தும் கற்பித்தல் வேண்டும். இப்பகுதிகளில் கதாசிரியர் மற்றும் கட்டுரையாசிரியர் கூறவந்த விடயங்களின் உள்ளார்ந்த பொருளினை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துதல் வேண்டும். ஒவ்வொரு சொற்கள், சொற்றொடர்கள் மற்றும் வாக்கியங்களிலும் ஆசிரியர் வெளிப்படுத்தும் விடயங்கள், அவற்றின் பொருள், நயம் என்பவற்றை தெளிவாகக் கற்பித்தல் வேண்டும்.

## 4.3.9 வினா இலக்கம் 5 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

- **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5.** பாரதியார், தனது **'சுயசரிதை'யில்,**

(அ) தன் காதலியின் வரவுக்காகத் தினந்தோறும் காத்திருந்தமை

(ஆ) அவள் போகும் இடமெல்லாம் அவளைப் பின் தொடர்ந்தமை

ஆகிய தனது செயற்பாடுகளை விபரிப்பதற்குக் கையாண்ட உவமைகளின் பொருத்தப்பாட்டினை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

அ)

உவமானம் : தேசபக்தர்கள் வருகைக்காக ஒற்றர்கள் ஒளித்துக் காத்திருத்தல்

உவமேயம் : காதலியின் வருகைக்காக பாரதியார் காத்திருத்தல்

பொதுத்தன்மை: எதிர்பார்த்துக் காத்திருத்தல் / கைப்பற்றும் நோக்கில் காத்திருத்தல்

பாரதியார் தான் வாழ்ந்த காலத்தோடு ஒட்டிய சம்பவத்தை காதலியின் வருகைக்காக காத்திருக்கும் தன் செயலுக்கு பொருத்தமான உவமானமாக கையாளுகின்றார்.

**(05 புள்ளிகள்)**

ஆ)

உவமானம் : தேர்ச்சில்லில் அகப்பட்ட கொம்பு இல்லாத சிறு பிராணி (பல்லி) தேர் செல்லும் இடமெல்லாம் இழுபட்டு செல்லுதல்.

உவமேயம் : காதலியின் நினைவுகளால் கோர்க்கப்பட்ட மனதுடன் பாரதியார் காதலியைப் பின்தொடர்ந்து செல்லல்

பொதுத்தன்மை: பின்தொடர்ந்து செல்லுதல்.

சக்கரத்தில் ஒட்டிக்கொண்ட பல்லி தேர் செல்லும் இடம் எல்லாம் சக்கரத்தோடு சுழன்று சுழன்று செல்வது போல பாரதியார் பெண்ணைப் பின் தொடர்ந்து செல்வதற்குப் பொருத்தமான உவமை


**(05 புள்ளிகள்)**

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

### 4.3.10 வினா இலக்கம் 5 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.12**

வினா இல. 5 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு


இது ஒரு தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 10 ஆகும். இதில்,

0 – 2 வரையான புள்ளிப் பரம்பலில் 53% ஆனோரும்
3 – 5 வரையான புள்ளிப் பரம்பலில் 19% ஆனோரும்
6 – 7 வரையான புள்ளிப் பரம்பலில் 12% ஆனோரும்
8 - 10 வரையான புள்ளிப் பரம்பலில் 16% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 53% ஆனோர் 2 புள்ளிகள் அல்லது அதற்கும் குறைவாக புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அதேவேளை 6 – 10 வரையான புள்ளிப் பரம்பலில் 28% ஆனோர் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 4.13**

5 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

5 ஆம் வினாவின் (அ) உப பகுதியின் இலகுதன்மை 38% ஆகவும் (ஆ) உப பகுதியின் இலகுதன்மை 36% காணப்படுகின்றது. இவ்வினா பாரதியார் சுயசரிதையிலிருந்து வினவப்பட்டுள்ளது.

இதில் பாரதியார் கையாண்ட உவமைகளின் பொருத்தப்பாட்டினை விளக்குக என்பதே வினாவாக உள்ளது. எனினும் மாணவர்கள் இதற்கு விடையளிக்க இடர்பட்டுள்ளனர். பாடப்பரப்புகளில் வரும் அணிகளை இனங்காணவும் அவற்றை விளக்கவும் அணிகளின் சிறப்பு மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றை விளக்கவும் பயிற்சியளித்தல் வேண்டும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் அணிகளைக் குறிப்பாக இனங்காண்பதிலும் அவ் அணி குறித்த இடத்தில் பயன்படுத்தப்பட்டதற்கான பொருத்தப்பாட்டை விளக்குவதிலும் இடர்படுவதை அவதானிக்க முடிகிறது.

## 4.3.11 வினா இலக்கம் 6 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

**6.** (அ) "கணக்காயரில்லாத..." என்னும் '**திரிகடுகம்**' பாடலில், நன்மை பயவாதன என்றும்

(ஆ) "கற்றார்முன்..." என்னும் '**இனியவை நாற்பது**' பாடலில், இனிமை பயப்பன என்றும்

கூறப்படும் விடயங்களைத் தெளிவுறுத்துக.

(10 புள்ளிகள்)

அ)

- அறிவு நூல்களைக் கற்றுத் தரும் ஆசிரியர் இல்லாத ஊர்
- மனிதர்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்கும் மூத்தோர் இல்லாத சபை
- ஏனையவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து உணவு உண்ணும் குணம் இல்லாதவர்கள் அயலில் இருத்தல்.

**(05 புள்ளிகள்)**

ஆ)

- கற்றிந்தோர் முன்னால் தாம் கற்ற கல்வியை உரைத்தல்
- அறிவிற் சிறந்தோரைச் சேர்ந்திருத்தல்
- எள்ளளவும் பிறரிடம் இரவாது தான் பிறருக்குக் கொடுத்தல்.


**(05 புள்ளிகள்)**

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

### 4.3.12 வினா இலக்கம் 6 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.14**

வினா இல. 6 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

இது ஒரு தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 10 ஆகும். இதில்,

0 – 2 வரையான புள்ளிப் பரம்பலில் 18% ஆனோரும்

3 – 5 வரையான புள்ளிப் பரம்பலில் 22% ஆனோரும்


6 – 7 வரையான புள்ளிப் பரம்பலில் 21% ஆனோரும்

8 - 10 வரையான புள்ளிப் பரம்பலில் 39% ஆனோரும்

புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 6 - 10 வரையான புள்ளிகளை 60% ஆனோர் பெற்றுள்ள அதேவேளை 40% ஆனோர் 0 - 5 வரையான புள்ளிப் பரம்பலில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 4.15**

6 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

6ஆம் வினாவின் (அ) உப பகுதியின் இலகுதன்மை 67% ஆகவும் (ஆ) உப பகுதியின் இலகுதன்மை 58% காணப்படுகின்றது. உப பகுதி 'அ' 'திரிகடுகம்' எனும் பாடலில் இருந்தும் 'ஆ' பகுதி 'இனியவை நாற்பது' பாடலில் இருந்தும் வினவப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் இப்பகுதி இலகுதன்மை கூடியதாக உள்ளது.

## 4.3.13 வினா இலக்கம் 7 மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விடைகள்

7. **'அற்றைத் திங்கள்'** நாடகத்தில் பாரிமகளிரின் துயரத்தை வெளிப்படுத்துவதற்கு,

(அ) புறநானூற்றுப் பாடல்

(ஆ) நாட்டார் பாடல் மரபு

ஆகியன பொருத்தமுறக் கையாளப்பட்டுள்ள வகையினை விளக்குக.

(10 புள்ளிகள்)

அ)

புறநானூற்றுப் பாடலினூடாக துயரம் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதம்

"அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்....." என்ற பாடலினூடாக

- அன்று தந்தை எம்மோடு இருந்தார் பறம்பு மலை எமக்குரியதாக இருந்தமை.
- இன்று எமது தந்தை இல்லை மூவேந்தர்கள் பறம்பு மலையைக் கைப்பற்றி விட்டமை

இவற்றைக் கூறுவதன் மூலம் துயரம் வெளிப்படுகின்றமை.

**(05 புள்ளிகள்)**

ஆ)

அற்றைத்திங்கள் நாடகத்தில் பாரி மகளிரின் துயரத்தை வெளிப்படுத்த நாட்டார் பாடல் மரபு (இங்கு தாலாட்டுப்பாடல்) கையாளப்பட்டுள்ளவாறு:

- தொட்டிலில் அசைந்தபடியே கதைகேட்டு மகிழ்ந்திருந்தமை
- அரளிப்பூத் தண்டாலே அத்தை அடிச்ச கதை....
- மல்லிகைப் பூச் செண்டாலே மாமன் அடிச்சகதை

- போரின் கொடூரத்தால் உறவுகளை இழந்தமை பற்றிக் கூறி வருந்துதல்
  - அரளிப் பூ தண்டு எடுக்கப் போன அத்தை திரும்பலையே
  - மல்லிகைப் பூ செண்டு கட்டப் போன மாமன் மீளலையே
- போரின் கொடுமையால் தொட்டில்வரை இரத்த வெள்ளம் எனக் கூறல்
- நிலவை இரசிக்க முடியாத தன்மையை வெளிப்படுத்தல்
  - பால் வார்த்த நிலா முகத்தில் பற்றி விட்ட தீப்பந்தம்
- நடை வண்டி, விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றை வைத்து விளையாடிய நினைவுகளை மீட்டி வருந்துதல்.
  - அழகான நடை வண்டி
  - அசைந்தாடும் கிலுகிலுப்பை
  - பழக ஒரு மரப்பாச்சி..


**05 புள்ளிகள்)**

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

### 4.3.14 வினா இலக்கம் 7 இற்கான பகுப்பாய்வு

**வரைபு 4.16**

வினா இல. 7 இற்குப் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் பரம்பல்




**மூலம் : RD/16/03/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

இவ்வினா ஒரு தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 10 ஆகும். இதில்,

0 – 2 வரையான புள்ளிப் பரம்பலில் 65% ஆனோரும்

3 – 5 வரையான புள்ளிப் பரம்பலில் 14% ஆனோரும்


6 – 7 வரையான புள்ளிப் பரம்பலில் 9% ஆனோரும்

8 – 10 வரையான புள்ளிப் பரம்பலில் 12% ஆனோரும்

புள்ளிகளை பெற்றுள்ளனர். 0 – 2 வரையான புள்ளிப் பரம்பலில் 65% ஆனோர் புள்ளிகளைப் பெற்றுள்ள அதே வேளை 35% ஆனோர் 3 – 10 வரையான புள்ளிப் பரம்பலில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 4.17**

7 ஆம் வினாவுக்கான இலகுதன்மை




**மூலம் : RD/16/04/OL** பத்திரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தித் தரவு 2024 இ.ப.தி

7 ஆம் வினாவின் (அ) உப பகுதியின் இலகுதன்மை 29% ஆகவும் (ஆ) உப பகுதியின் இலகுதன்மை 65% ஆகவும் காணப்படுகின்றது. (அ) உப பகுதியானது ஒப்பீட்டளவில் குறைவான இலகுதன்மை உடையதாகக் காணப்படுவதால், இந்த உப பகுதியானது பரீட்சார்த்திகளால் சரியாகப் புரிந்துகொள்ளப்படாமல் இருந்திருக்கலாம்.

‘அற்றைத் திங்கள்’ நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட புறநானூற்றுப் பாடல் தொடர்பில் பரீட்சார்த்திகளுக்கு போதிய தெளிவின்மையை இது காட்டுகின்றது. புறநானூற்றுப் பாடல் பொருத்தமுறப் பயன்படுத்தப்பட்டதை விளக்குமாறு கோரப்பட்டதற்கு பரீட்சார்த்திகள் 24% ஆன இலகுதன்மையையே பெற்றுள்ளமை இப்பாடலையும் அதன் சம்பவத்தையும் பரீட்சார்த்திகள் அறிந்துக்கொள்ளாமையை வெளிக்காட்டுகின்றது. எனவே ஆசிரியர்கள் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.